DUPLICATE

புதினப் பத்திரிகையாகப் பதிவுசேர்க்கப்பெற்றது.

# இந்துசாதனம்

ஸ்தாபிதம் (1889) ஆவணி மீ உ௯ உ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

## குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| பத்திரக் கிரயம். | |
|---|---|
| (முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.) | |
| யாழ்ப்பாணப்பட்டினம்: ஸ்ரீ ௪-௬௬ ரு. உ-உ-௫. | |
| வெளியூர், இந்தியா: | " ரு. ௩-௨-௫ |
| தொலைப்பகுதி: | " ரு. ௩-௪-௫. |
| தனிப்பிரதி சதம் -௦௫. | |

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| | | ரூ. ச. |
| ஒருதரமுறைக்கு:— | ஒருவருடம் | ௬-௫௦. |
| " | அரைவருஷம் | ௪-௦௦. |
| " | கால்வருஷம் | உ-௫௦. |
| " | ஒருமாதம் | -௫௦. |
| அதிகப்படியான விஷயங்களுக்கு விசேஷ கட்டணம் | | |

புத்தகம் - ௩௦ { யாழ்ப்பாணம்—காலயுக்தி வரு தைமீ ௰௦௨; ௧௯௧௯ ம் ஆ ஜனவரிமீ உ௩௨. } இலக்கம் — உ௭

உ

சிவமயம்.

கணபதி துணை.

சீர்பூத்த கருவிரா வமர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது துங்கப்
பிறைபூத்த சடைமுடிப் பிரானார் தந்த
வார்பூத்த வதிவிச்சை தொழிலெனேறு
மதம்பூத்த விநாயகன்றன் மலரடிவாழ்வாம.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

விலை சகாயத்திற்கும்
ஜவுளி நாணயத்திற்கும்
பேர்போன கம்பனி எது?
மதுரை மு. க.
இராமையர் அன் சன்ஸ்.

எங்கள் ஜவுளிக்கம்பனியில் சுமார் ௬௦ வருஷ காலமாக எங்கள் நேர் பார்வை யின்பேரில் கைதேர்ந்த நெசவுகாரர்களை க்கொண்டு பல தேசங்களிலுமுள்ள வியாபாரிகளுக்கும் மற்றும் குடித்தனகாரர்களுக்கும் ஏராளமான திணுசுகள் தயார் செய்து கொடுத்துக்கொண்டும், ஏராளமான திணுசுகள் கைவசம் வைத்துக்கொண்டும், விரும்பி எழுதும் திணுசுகளை யாதொரு பிசகின்றி அனுப்பியும் விசேஷ வியாபாரம் செய்து வருகிறோம் என்பது உலகம் பூராஅறிந்த விஷயம். தவிர தற்கால நாகரீகத்திற்குத் தக்கபடி பலஅநேக நூதன திணுசுகளும் வரவழைத்து ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு நேரிலும், வி பி யிலும் அனுப்பிக்கொண்டு வருகிறோம். அசலூர் ஆர்டர்களை உடனுக்குடன கவனித்து வி பி யில் அனுப்புவோம்.

F. M S. பெடரேடெட்மலாய்நாடுகளில் இருப்பவர்கள் ஆர்டருடன் முற்பணம் அனுப்பவேண்டும அல்லது பாங்க் மூலமாய் பெற்றுக்கொள்ளலாம் சிங்கப்பூர், பினாங்கு என்னும் இடங்களுக்கும வி பி யில அனுப்புவோம.

எங்கள் ஜவுளி விபரம் விலை யாப்தா (Catalogue.) இனமாக எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

மு. க. ராமய்யர் அன் சன்ஸ்
சுதேசி ஜவுளி வியாபாரிகள்,
மேலைக் கோபுரவீதி
மதுரை.

## சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுதஸ்லி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீருள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அயபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு இருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்சார்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கொடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும்பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா உ௦ அரைறாத்தலுக்கு ரூபா ௧௦. கால் றாத்தலுக்கு ரூபா ௫ தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதானை, கொழும்பு

## புதிய ஜவுளி நூல் கம்பெனி.

நயம் திணிசுகள். சோற்பலாபம். விலை சரசம்.

ஐயா,

அடியிற்கண்ட நம்முடைய ஜவுளிநூல் கம்பெனியில் பற்பல ஊர்களிலிருந்து உற்பத்தியாகி வருகின்ற தற்காலத்திற்கேற்ற நாகரீகமான திணிசுகளாயும் விலைகள்சரசமாயும் அனுப்பிக்கொண்டுவருகிறோம்.

ஹொம்ருல் காப்பிக் கலரும், கறுப்பு சிவப்பு 1-ம் நம். 60×40-ம் நம்பர் நூல்களில் கரை 1இஞ்சு வைத்து, பச்சைக் கரை சிகப்புக் கரை கறுப்புக்கரைகள் வைத்து முந்தியில் 4 அல்லது 5 இஞ்சு பட்டுபோட்ட 16 முழ சேலை 1-க்கு ரூபா 7-8-0. ஷை மாதிரியில் 44×40 நம்பர் நூலிற் போட்ட 16முழசேலை 1-க்கு ரூபா 7-0-0. ஷை மாதிரி 40×32 நம்பர் நூலிற் போட்ட 16 முழச் சேலை 1-க்கு ரூபா 6-8-0. இந்த விலைகளில் காப்பிக் கலர்ச்சேலையானாலும் பிளேன் கறுப்புச்சேலையானாலும் ஒரேவிதமான திணிசுகளை புதிதாய் உற்பத்திசெய்திருப்பதால் விலைகள் கண்டு எழுதியிருக்கிறோம். இன்னும் மற்ற பனாரிஸ், பெங்களூர், கோயம்புத்தூர், சேலம், ஆரணி, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சிறுப்பள்ளி, உள்ளூர், இன்னும் அனேக ஊர்களிலிருந்து ஏராளமாய்த் தருவித்து வைத்திருக்கிறோம். தாங்களும் வேண்டும் திணிசுகளுக்கு 100-க்கு 10 வீதம் அட்வான்ஸ் அனுப்பினால் திணிசுகள் அனுப்பப்படும்.

தாங்கள் நமது கம்பெனியில் ஒருமுறை திணிசுகள் தருவித்துப்பார்த்தால் எப்போதும் நமுடைய கம்பனிக்கே ஆடர்செய்வீர்கள். தவிர வேறு எவ்விடத்திலிருந்தும் தருவிக்கமாட்டீர்கள்.


தவிர 10-ம் நம்பர், 20-ம் நம்பர் நூல்களில் நாட்டு கெட்டி சிகப்பு 1-ம தரம், 2-ம் தரம், 3-ம தரம் நூல்களில் வர்ணம் தந்து. கண்ணல சாயத்தில் 5 ருதல் கட்டுகளும், சீமைக் கெட்டிச் சாயம் கறுப்பு மாதிரி 10-ம நம்பர் 20-ம் நம்பர் 30-ம நம்பர் 40-ம் நம்பர் நூல்களில் கெட்டிச் சாயமுள்ள 5 ருத்தல் பெட்டிகளும் விலைகள் நயமாயும் இழைப்புக்கு தெரிலாமலும் நயமான நூல்கள் தயாராகின்றன. தேவையுள்ளவர்கள் வி. பி. மூலம் ஆடர் செய்துகொள்ள வேண்டியது.

N.B. ஆடர்கள் உடனே தவறின்றி அனுப்பப்படும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இப்படிக்கு,
M. S. RamaswamyIyer & Company,
Cloth & Yarn Merchants,
Singara Topu Street,
Madura, S. India.

26-10-18.

## கேசரஞ்சித தைலம்.




"இத்தைலம் நான் உபயோகித்த தைலங்களில் மிகச்சிறந்தது" என்று கல்கத்தா நியாயப்பிரமாணகல்லூரித் தலைமை ஆசிரியர் பரிஸ்தர் டக்தர் பாஜி எல். எல். டீ. அவர்களும்,

"இத்தைலம் நறுமணமுள்ளது தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியது" என்று டக்தர் பரிஸ்தர் எல். எம். மித்திரா எம். ஏ. எம். டீ. அவர்களும்,

"தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுப்பதற்கு மிகச்சிறந்தது" என்று டக்தர் எம். என். பானேர்ஜி எம். டீ. அவர்களும்,

"இது நல்ல கேசரஞ்சித தைலம் தலைக்குக் குளிர்ச்சியைத் தருகின்றது" என்று டக்தர் எஜ். என். கோஷ் எம். டீ. அவர்களும்,

"இதிலும் அதிக நயத்தைக் கொடுக்கக்கூடிய தைலம் வேறில்லை" என்று டக்தர் யூ. மித்திரா எம். டீ. எம். ஆர். ஏ. எஸ். எல். சீ. எஸ். அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

கேசரஞ்சிததைலம் விலை.

புட்டி 1-க்கு ரூபா 1. தபாற்செலவின்றி ரூபா 1-8-5.

புட்டி 3-க்கு ரூபா 2-8-4. தபாற்செலவின்றி ரூபா 2-8-14

## சித்தமகரத்துவாச.

சித்தமகரத்துவாச என்னும் 'தொனிக்' ஆயுள்வேத ஔஷதங்களுள் மிகச்சிறந்தது. இது விலைபெற்ற மருந்து. ஏனெனில், இதில் தங்கம் சேர்த்திருக்கின்றது. இது நெருப்புக்காய்ச்சல் முதலிய காய்ச்சல்களையும், நாட்பட்ட கழிச்சல் நோயையும், மேகச்சூட்டையும், பிரசவத்தின் பின் பெண்களுக்குண்டாகும்நோய்களையும், மண்டைப்பெலவீனத்தையும், ஞாபகக்குறைவையும், நரம்புத்தளர்ச்சியையும், கண், முகம், தோல் முதலான விடங்களிலுண்டாகும் வெளுப்புத் தோற்றத்தையும், நீரிழிவு, சோகைவாதம், குன்மம், வலி, க்ஷயரோகம்முதலிய நோய்களையும் இது அதிசயப்படக்கூடிய விதமாய்ப் போக்கடிக்கும்.

இதன் விலை தோலா 1-க்கு ரூபா 80. ஒருகிழமைக்கு உபயோகிக்கக்கூடிய மருந்து ரூபா 3.

வியாதிகளினதும் மருந்துகளினதும் விபரங்களடங்கிய 'கற்பலக்கு' கள் வேண்டியவர்களுக்கு இனமாயனுப்பப்படும்.

வியாதிகளைப்பற்றிச் சுருக்கமாயெழுதி யனுப்பினால் மருந்தோடு அல்லது மருந்தில்லாமல் இந்தியா, பேர்மா, இலங்கை, தொடுவாய் இராச்சியம் முதலியஇடங்களுக்கு "பிறிஸ்கிரிப்ஷன்" (Prescreption) அனுப்பப்படும்.

KAVIRAJ N. N. SEN,
GOVT. MEDICAL DIPLOMA HOLDER,
18-1 & 19, Lower Chitpur Road,
CALCUTTA.

## JAFFNA CO OPERATIVE STORES LTD.

யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம்

இச்சங்கம், கொம்பனிக் கட்டளைச்சட்டப்பிரகாரம் பதிவுசெய்யப்பட்டது.

ஒருபங்கு நூறு ரூபாயுள்ள ஆயிரம் பங்குகள் கொண்ட ஒரு லட்சம் ரூபா முதலுள்ளது.

சங்கத்தின் நோக்கம்: அரிசி, நெல், புடைவை, காய், தானிய முதலிய பல சாமான்களினும் வியாபாரம் நடத்தல்.

1918-ம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 26-ந் திகதிக்குச் சரியாய் நிகழும் காலயுக்தி வருஷம் ஆவணி மீ ௰௦௨ திங்கட்கிழமை காலமே சூரியோதயத்தில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்திலே வியாபாரத் தொழில் தொடங்கிக் கிரமமாகநடைபெற்றுவருகின்றது. இன்னும் 500 பங்குகள் விற்பனவாகிருக்கின்றன. விரும்பியவர்கள் சங்கத்தின லேககருக்கு மனு அனுப்பும்படி கேட்கப்படுகிறார்கள்.

M. Asaipillai,
லேககர்,
J. C. S. Ltd.

## விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான திறம்பட்டுச்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காவடிசகளாதம், முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காறர்களால் செய்யப்பட்டு நமது சாப்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும் அவர் அவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரிதயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

இப்படிக்கு,
மு. நாகலிங்கம் அன் சன்ஸ்
பறங்கித் தெரு,
யாழ்ப்பாணம்.

## முதிரை, வேம்பு, பாலை, சோமுந்திரி, பூவரசு,

மேற்சொல்லிய மரங்கள் பலவித நீளத்திலும் சுற்றளவிலும் கச்சேரிரோட்டில் தராக்குளத்திற்குச்சமீபமாயுள்ள ஓர் வளவிற் போடப்பட்டிருக்கின்றன.

வாங்க விரும்புவோர் வேண்டிய விபரங்களை யென்னிடம் அறிந்துகொள்ளலாம்.

Dr. A CHINNIA,
Pettah Dispensary,
Jaffna.

## அறிவித்தல்.

ஏழாலை முத்துக்குட்டி வயித்தியலிங்கமாகிய நான் 1911ஆ பங்குனிமீ 11உ மயிலிட்டி நொத்தாரிஸ் காலஞ்சென்ற க. மயில்வாகனம் பிள்ளை முகதாவில் எனது பிதா மாதாக்கள் தங்கள் சீவிய உருத்துக்களைய எனக்கெழுதித்தந்த நன்கொடைஉறுதி தவறிவிட்டதென்றும், அதைக்கொண்டு வொராவது எவ்வகைப்பட்ட சாதனங்களும பிறப்பிக்கக்கூடாதென்றும், மேலும், 1918ஆ தொடர்ச்சமாக நான் குறித்த உறுதியை ஆதாரமாகக் கொண்டேனும் அன்றேல் வேறெவ்வகையாலேனும், ஒருவகையான கடனுறுதியேனும், சேட்டேனும் எழுதிகொடுக்கவில்லையென்றும் இதனால் சகலருக்கும் அறிவிக்கிறேன்,

இங்ஙனம்,
மு. வயித்தியலிங்கம்.

## நேத்திரரோகிகட்கோரறிவித்தல்.

கண்களிலுண்டாகும் எவ்வித நோய்களுக்கும் ஏற்க ஆயுள்வேதமுறைப்படி என்னால் ஆக்கப்பட்ட முதற்றரமான தைலங்கள், ஔஷதங்கள் முதலியனகொண்டு நேத்திரவைத்தியம் நடத்திவருகின்றேன். காலை 8மணிமுதல் 10மணிவரையுமென்னது மருந்துசாலையில் நோயாளர் சிகிச்சைபெறலாம்.

சாயன்மார்க்கட்டு. S. [illegible]பிள்ளை.

## விளம்பரம்.

ஓர் அச்சியந்திரமும் எழுத்துக்களும் அதனுபயோகத்துக்குவேண்டிய சாமான்களும் விற்கவிருக்கின்றன. தேவையானவர்கள் என்னிடம் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,
க. கார்த்திகேசு,
சொக்குவில் கிழக்கு.

## விளம்பரம்.

பருத்தித்துறை நாகலிங்கம் ஆறுமுகத்தையும், நாகலிங்கம் சுப்பிரமணியத்தையும் நான் ஓர் சட்டின்பேரில் வருமதியான தொகையை அறவு பண்ணுவதற்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 13,392 ம் இலக்க வழக்கில் தாவா பிண்ணியிருக்கிறேன். அவர்கள் இவ்விடம் இல்லாததினால் கட்டளை தொடுபடவில்லை. அவர்கள் இப்போ எந்த இடத்திலிருக்கிறார்களென்று தெரியவில்லை. அதை அறிந்தவர்கள் எனக்கு அறிவிக்கும்படி கேட்கிறேன்.

நா முதலியார் கிருஷ்ணபிள்ளை,
13-1-1919. பருத்தித்துறை.

## மெரிக்கல்டிப்பாட்மென்றைச்சேர்ந்த ஒப்பந்தங்கள்.

1919-ம் ஆ பங்குனி௴ 1௳ தொடக்கம் 1922-ம் ஆ புரட்டாதி௴ 30௳ வரைக்குமுள்ள காலத்தில், ஒன்று, அல்லது இரண்டு, அல்லது மூன்று வருஷங்களுக்கு, அச்சரப்பத்தானையிலிருக்கும் அரசாட்சியாரின் ஆசுபத்திரிக்குத் தேவையான இன்சாமான்கள் கொடுப்பதற்காகிய ஒப்பந்தக்கடுதாசிகள், ஒப்பந்த விசாரணைத் தலைவரால் கொழும்பில் தமதாபீஸில் 1919-ம் ஆ தை௴ 28௳ மத்தியானம் 12 மணிவரைக்கும் பெற்றுக்கொள்ளப்படும்.

இதைப்பற்றிய மற்றும் விளம்பரங்களுக்குக் "கஸற்" பத்திரிகையைப் பார்க்கவும், அல்லது பிரதான சிவில் மெடிக்க லாபீசரிடம் எழுதிக் கேட்கவும்.

## யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைத் தானவரவு.

தாவடி ஸ்ரீ. வெற்றிவேலு முதலியாரவர்கள் புத்திரியும், டாக்குத்தர் ஸ்ரீ சின்னத்தம்பியவர்களின் பாரியும், எக்ஸைஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. சிவஞானத்தின் மாதாவுமான ஸ்ரீமதி சொர்ணம்மாளின் அபரக்கிரியையில் எமது சபைக்கு வரித்தனுப்பிய ரூபா 1 பெற்றோம்.

சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டி,
தனாதிகாரி.

## பத்திரக்கிரய வரவு.

| ஸ்ரீ. | ரூ. ச. |
|---|---|
| இ. கு பூர்ணானந்தேஸ்வரக்குருக்கள், திரிகோணமலை | 2-50 |
| வை. வீராசித்தம்பி, வண் கிழக்கு | 2-00 |
| எஸ். எஸ். சுந்தரம்பிள்ளை, பாணந்துறை | 3-75 |
| உ. சதகுத்தம்பி, மன்னார் | 5-00 |
| ஐ. கதிர்காமத்தம்பி, திரிகோணமலை | 6-75 |
| T. மயில்வாகனம், முல்லைத்தீவு | 3-50 |
| வீ. ஆ. இராமசாமிக் கணகசப்பிள்ளை, பதுளை | 3-50 |
| சண்முக வித்தியாலயம், கொடிகாமம் | 1-50 |
| சைவப்பிரகாச வித்தியாசாலை, கோப்பாய் | 1-00 |

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:-காலயுக்தி௵ தை௴ ௧௦௳

## தேசாதிபதி யவர்களின் வருகை.

நமது தேசாதிபதி சேர் ஹென்றி உவில்லியம் மனிங் அவர்கள் இந்த ஜனவரி௴ கஉ-ந் தேதி காலை எட்டுமணி யளவில் புகைரதமார்க்கமாக வந்து யாழ்ப்பாணத்திலிறங்கினர். அப்போது வடமாகாண ஏசன்றர், யாழ்ப்பாணம் லோக்கல்போட் அங்கத்தவர்கள், பிரதான உத்தியோகஸ்தர், தலைமைக்காரர், விசேஷ ஊர்ப்பிரபுக்கள் ஆதியோர் பலர் யாழ்ப்பாணம் புகைரதஸ்தானத்திலவரை யேற்று உபசரித்தார்கள். தேசாதிபதியவர்கள் வந்து கூடிய சகலருக்குங் கைகொடுத்த பின் ஏசன்றரவர்களுடன் ஓர் மோட்டர் ரதமீதிவர்ந்து யாழ்ப்பாணம் கோட்டையிலுள்ள இராசாவின் மாளிகைக்குச்சென்றனர்.

பின் அங்கிருந்து சாயந்தரம் இரண்டு மணியளவில் மேள வாத்தியத்துடன் முற்றவெளியிலுள்ள 'திஜ்வே' மண்டபத்திற்குச் சென்று அங்கு கூடியிருந்த பெருந்திரளானோர்க்குத் தரிசனமளித்தனர், இப்பெருஞ் சபையிலே லோக்கல்போட் அங்கத்தவர்களாலும், ஊரவர்களாலும், தலைமைக்காரராலும், யாழ்ப்பாணச் சங்கத்தாராலும் ஒவ்வோருபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் லோக்கல்போட் அங்கத்தவர்களால் வாசிக்கப்பட்ட உபசாரப் பத்திரத்தில் யாழ்ப்பாணச் சுகாதாரநிலை திருப்திகரமானதல்லவென்றும், அதனை நன்னிலைப்படுத்தற்கு யாழ்ப்பாணப் பட்டினப்பகுதிக்கு நல்ல தண்ணீர் உதவப்படும்படி செய்யவேண்டுமென்றும், மழைக்காலத்தில் வெள்ளம் ஊர்மனைகளில் தங்கியில்லாது ஓடிவிடும்படி கான்களும் வாய்க்கால்களும் வெட்டப்பட வேண்டுமென்றும், இவற்றை நடத்துவதற்குப் பொது அரசிறை வருமானப்படியிலிருந்து பணம் லோக்கல்போட்டுக்கு அரசாட்சியார் கொடுத்துதவவேண்டுமென்றும், லோக்கல்போட் எல்லைக்குள் சாராயக் குத்தகையாலும் கள்ளுக் குத்தகையாலும் வரும் வரும்படியை இதற்குக் கொடுத்துதவுத லுசிதமமாகுமென்று மெடுத்துக்காட்டப்பட்டது.

நமது தேசாதிபதியவர்க ளிவ்வுபசாரப் பத்திரத்திற்கு மறுமொழி யளித்தபோது நல்லதண்ணீர் வருவித்துக்கொடுத்தலும், கான்கள் வாய்க்கால்கள் வெட்டுவதும் அத்தியாவசியமென்றும், இவற்றைப்பற்றித் தாம் கவனிப்பாரென்றும் சொல்லினர்.

ஊரவர்களால் வாசிக்கப்பட்ட உபசாரப்பத்திரத்தில் ஏலவே உண்டாகிய பெருவெள்ளத்தால் யாழ்ப்பாணத்திற் பெருஞ்சேதமுண்டாயிற்றென்றும், இவ்வெள்ளத்தால் நட்டப்பட்டவர்களுக்குச் சகாயஞ்செய்ய, கொழும்பு தொடுவாய் இராச்சியப்பகுதி முதலிய பிறவிடங்களிலிருந்தும் பணமனுப்பப்பட்டதென்றும், அனுப்பப்பட்ட பணம் போதியதாயிராதிருந்து அநேகருக்குச் சகாயஞ்செய்யப்பட்டதென்றும், ஆடுமாடுக ளதிகமாயிறந்துபோனபடியால் கமச்செய்கைக்கு நட்டம் வரக்கூடியதாயிருக்கின்றதென்றும், இது விஷயத்தில் அரசாட்சியார் கமக்காரருக்கு உதவிசெய்ய முன்வருவார்களெனத் தாம் நினைக்கின்றார்களென்றும், யாழ்ப்பாணத்திலுள்ள கான்களும் வாய்க்கால்களும் நன்னிலையிலிருந்திருக்குமாயின் ஏலவே நிகழ்ந்த வெள்ளத்தாலதிக சேதமுண்டாயிருக்கமாட்டாதென்றும், யாழ்ப்பாணத்திலே மழை யதிகமாகப் பெய்யுங் காலங்களில் சுரமுண்டாவதற்குக் காரணம் வெள்ளம பலவிடங்களிற் றங்கிநிற்பதேயென்றும், ஆகையால் கான்களும் வாய்க்கால்களும் கடல்மட்டத்துக்கு வெட்டப்பட்டு வெள்ளம் ஓரிடத்திலுந் தங்கியில்லாது ஓடிவிடும்படி செய்யவேண்டுமென்றும், வடமத்திய மாகாணத்திலும் மற்றைய வன்னிப்பகுதிகளிலும் அதிக செழிப்பான நிலங்கள் இன்னும்செய்கைக்குள்ளாகாதிருக்கின்றதென்றும், யாழ்ப்பாணத்தில மிதமிஞ்சிக் குடியேறியிருக்குஞ் சனங்களை அங்கே குடியேறும்படி செய்யவேண்டுமென்றும், கச்சடுவா குளத்துக் கணித்தாய்ச் சிங்களவரைக் குடியேற்ற அரசாட்சியார் செய்திருக்கும் ஒழுங்கைப்போலத் தமிழர் மேற்படி வன்னிப்பகுதியிற் குடியேற ஒழுங்கு செய்யப்படவேண்டு மென்றும், பரந்தன் புகைரதஸ்தானத்திலிருந்து பூநகரி வழியாகக் கல்முனைக்கு ஒரு தெருத் திறக்கவேண்டுமென்றும், பரந்தன் முரசுமோட்டை ரேட்டை முல்லைத்தீவுவரைக்கும் நீட்டிக்கவேண்டுமென்றும், வல்லிபுரம் மருதங்கேணிரேட்டு போட்டுமுடிக்கப்படவேண்டு மென்றும், பண்ணைத்துறைப் பாலவேலை விஷயமாகத் திருத்தங்கள்செய்யப்படவேண்டுமென்றும், யாழ்ப்பாணம் புகைரத ஸ்தானத்தைப் பிரயாணிகளின் வசதிக்கேற்றதாய்ப் பெருப்பிக்கவேண்டு மென்றும், இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு புகைரதமார்க்கமாக அனுப்பப்படும் பொருட்கள் கொழும்புக்குக் கொண்டுபோகப்பட்டுப் பின் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படாது நேரே யாழ்ப்பாணத்துக்கு வரும்படி செய்யவேண்டுமென்றும், முடிக்குரிய காணிகளைக் குத்தகையில் மாத்திரங்கொடாது முன்போல விற்றும்வரவேண்டுமென்றும், யாழ்ப்பாணத்திலே ஓர் கிருஷிப்பாடசாலையும் ஒரு முன்மாதிரித்தோட்டமும் ஸ்தாபித்தற்கு வேண்டிய பணத்திற்கு ஓர் மதிப்பு எடுக்கவும், அவற்றிற்குவேண்டிய நிலத்தை வாங்கவும் ஓர் கம்மிற்றி நியமிக்கப்பட்டதென்றும், இம்முயற்சி விரைவில் நிறைவேறவேண்டு மென்பது தங்கள் பேரபிப்பிராயமா யிருக்கின்றதென்றும், இலங்கையிலே ஓர் சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்படவேண்டு மென்றும், இந்தியாவில் ஏற்படுத்தப்படவிருக்கும் அரசுமுறைத் திருத்தங்களுக் கேற்ப இலங்கைச் சட்டநிருவாக சபையிலும் சட்டநிரூபண சபையிலும் திருத்தங்கள் செய்யப்படவேண்டு மென்றும் எடுத்துக் காட்டப்பட்டன.

இவ்வுபசாரப் பத்திரத்திற்கு விடையளித்தபோது தமக்குச் செய்த பெரும் உபசரணைக்குத் தாம் ஸ்துதி கூறுகிறாரென்றும், அதிக விடாமுயற்சியும் விவேகமுமுள்ள யாழ்ப்பாணத்தவர் மத்தியில் தாம் வரப்பெற்றது தமக்குப் பெருஞ் சந்தோஷத்தைக் கொடுக்கின்றதென்றும், தாம் இலங்கைப் பரிபாலனத்தைக் கையேற்று இப்போது நாலுமாசங்கள் மாத்திரஞ் சென்றிருக்கின்றனவென்றும், பல விஷயங்களைக் குறித்துத் தாமின்னுமறிய வேண்டியிருக்கின்றதென்றும், இப்படிப்பட்ட தருணங்களில் தாம் நிறைவேற்றக்கூடியனவற்றிற்கன்றி வேறொன்றுக்குந் தாம்வாக்களிப்பதில்லையென்றும், யுத்தம் நிறுத்தப்பட்டிருப்பது தமக்குப் பெருஞ் சந்தோஷத்தைக் கொடுக்கின்றதென்றும், இந்த யுத்த சம்பவமானது முன்னொருகாலத்தும் நிகழ்ந்திராத பெருஞ் சம்பவமென்றும் சிநேக அரசாட்சியார் ஒரு சமையத்திற் பெரும ஆபத்தான நிலையிலிருந்தார்களென்றும், ஆனால் இப்போது முதற் கடவுளினதுதவியாலும், இரண்டாவதாய் பிரிட்டிஷ் கடலிராணுவத்தினதும் தரையிராணுவத்தினதும், மற்றைய சிநேக அரசாட்சியாரினதும் உதவியாலும் அவ்வாபத்து நீங்கி ஜெயமுண்டாகியிருக்கின்றதென்றும், வெள்ளத்தால் நட்டப்பட்டவர்களின் சகாயத்தின் பொருட்டு ஓர்தொகைப்பணம் அரசாட்சியார் கொடுக்கும்படி தாம் செய்வாரென்றும், கான்கள் முதலியவற்றை நன்னிலைப்படுத்துவது அத்தியாவசியமென்பதைத் தாமுணர்கின்றாரென்று , இதைக் குறித்து விசாரணை செய்வதற்கு ஓர் இன்சினீர் நியமிக்கப்பட்டிருக்கின்றாரென்றும், சிங்களவர் குடியேறுவதற்குச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகள்போன்ற ஒழுங்குகள் தமிழர் வன்னிநாடுகளுக்குச் சென்று குடியேறுவதற்கும் செய்யப்படுமென்றும், நல்ல ரேட்டுகள் திறக்கப்படல் அவசியமென்றும், அதைப்பற்றித் தாம் ஏசன்றரோடு ஆலோசனை செய்கிருக்கின்றாரென்றும், யாழ்ப்பாணம் புகைரதஸ்தானம் தாம் வந்து இறங்கிய போது மிகவுமலங்கரிக்கப்பட்டிருந்தமையால் தாமதன் குறைகளை மட்டிடக்கூடாதிருந்ததென்றும், ஆயினும் அதில் வசதியான கட்டடங்க ளமைப்பதற்கு வேண்டிய பணத்திற்கு ஓர் மதிப்பு அனுப்பும்படி புகைரதத்தலைவரைக் கேட்பாரென்றும், இந்தியாவிலிருந்து புகைரதமார்க்கமாக அனுப்பப்படும் பொருட்கள் நேரே யாழ்ப்பாணத்திற்கு வரும்படி செய்வாரென்றும், முடிக்குரியகாணிகள் விலைக்கு விற்கப்படும்படி செய்வாரென்றும், கிருஷிபாடசாலையும் ஓர்முன்மாதிரித்தோட்டமும் விரைவிலே யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்படுமென்றும், சர்வகலாசாலை ஸ்தாபித்தற்கு வேண்டிய பணத்தின் பெரும்பாகத்தை அரசாட்சியார் செலவிடுவார்களென்றும், ஆயின் ஊரவர்களு மதற்கு உதவிசெய்யவேண்டு மென்றுங் கூறினர்,

இலங்கை அரசுமுறைத்திருத்தத்தைப்பற்றித் தேசாதிபதியவர்கள் பேசியபோது தாம் இலங்கை யரசைக் கையேற்று இப்போது நாலுமாசங்கள் மாத்திரஞ் சென்றிருக்கின்றனவென்றும், ஆதலால் தாமதைக் குறித்து யாதும் இப்போது சொல்லத்தக்கதா யிருக்கவில்லையென்றும், யாதுந் திருத்தங்கள் செய்யப்படும்போது சகல சாதியாருக்குஞ் சமையத்தாருக்கு மேற்ற திருத்தங்களை செய்யப்படுமென்றும், முதன்முதல் நகரசங்கம் லோக்கல்போட் முதலியன பருப்பிக்கப்படவேண்டுமென்றுங் கூறினர். தேசாதிபதியவர்கள் சுயவரசுச் சலாக்கியத்தைப்பற்றி யாதுஞ் சொல்லவில்லையாயினும் இந்தியாவுக்குச் சுயவரசுச் சலாக்கியங்கள் கொடுக்கப்படும்போது இலங்கைக்கும் பல அரசுரிமைச் சலாக்கியங்கள் ஈயப்படுவது நிச்சயமே.

அடுத்தநாள் வியாழக்கிழமை முற்பகல் தேசாதிபதியவர்கள் கோடு கச்சேரி முதலிய பிரசித்த ஆபீசுகளைத் தரிசித்தபின் பிற்பகல் கச்சேரியில் நடைபெற்ற விருந்துக் கொண்டாட்டத்திற்குச் சமுகமளித்தனர்.

வெள்ளிக்கிழமை முற்பகல் சென்ற் ஜோன் கல்லூரி சென்ற் பேற்றிக்கல்லூரி மத்தியகல்லூரி இந்துக்கல்லூரி முதலிய கல்லூரிகளைத் தரிசித்து, பிற்பகல் வலிகாமம்மேற்கு மணியகாரனவர்களாலிடப்பட்டிருந்த பந்தருக்கும் விக்ரோறியாக் கல்லூரிக்கும் ஊர்காவற்றுறைக்குஞ் சென்று திரும்பி வட்டுக்கோட்டையிலிறங்கி யாழ்ப்பாணக் கல்லூரியைத் தரிசித்து நேரே கோட்டைக்குச் சென்றனர்.

சனிக்கிழமை உயபளங்கள், நாயன் மார்கட்டு வைத்தியசாலை, முன்மாதிரிப் புகையிலைத் தோட்டம், இணுவில் ஆசுபத்திரி, தெல்லிப்பழைக் கைத்தொழிற்சாலை முதலியன பலவற்றைத் தரிசித்து அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை மோட்டர்ரதமூலமாகப் பிரயாணமாயினர். இந்தப் பிரயாணத்தில் தேசாதிபதியவர்கள், முல்லைத்தீவு மன்னார்ப் பகுதிகளையுந் தரிசித்துச் செல்வர்.

நமது தேசாதிபதியவர்கள் நாலு நாட்களாக நமது மத்தியில தங்கிய பலவிடங்களையுஞ் சுற்றிப் பார்த்து நமது குறைகளையெல்லாம் நன்குணர்ந்து சென்றிருக்கின்றனராதலால் இவரது வருகையால் நமது தேசத்திற்கு அதிக நன்மை யுண்டாகுமென்றே நினைக்கின்றோம்.

## சமாச்சாரம்.

வெள்ளத்தால் நட்டப்பட்டவர்களுக்குச் சகாயம்:—தொடுவாய்ப்பகுதி அரசாட்சியார் யாழ்ப்பாணத்தில் ஏலவே உண்டாகிய பெருவெள்ளத்தால் தங்கள் வீடுவாசல்களையும் ஆடுமாடுகளையும் இழந்தவர்களுக்குச் சகாயஞ்செய்வதற்கு 5000 டலர் அனுப்பியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு:—யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு நீதிபதி டக்தர் டீ. ஈ. பீரிஸ் அவர்கள் கொழும்பு டிஸ்திறிக்கோட்டு நீதிபதியாகச் சிறிது காலத்துக்கு வேலை பார்க்கும்படி நியமிக்கப்பட அவரது இடத்தில் கௌரவ சேர் அம்பலவாணர் கனகசபையவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஓர் புதிய அத்துவக்காத்:—யாழ்ப்பாணம் லோக்கல்போட் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஸ்பென்சர் செல்வத்துரையவர்களின் சகோதரன் ஸ்ரீ ஸ்பென்சர் இராசரத்தினமவர்கள் ஓர் அத்துவக்காத்தாக வேலை பார்ப்பதற்குத் தத்துவம் பெற்றிருக்கின்றனர். இவர் கொழும்புக் கோடுகளிலேயே வேலைபார்த்துவருவர்.

சுப்பிரமணிய சாஸ்திரிகள் வாக்கிய பஞ்சாங்கம்:—பருத்தித்துறை பிரமஸ்ரீ. ச. சுப்பிரமணிய சாஸ்திரிகளாற் கணித்து அவர் சகோதரர் பிரமஸ்ரீ. ச. சோமசுந்தர ஐயரவர்களால் தங்கள் கலாநிதி யந்திரசாலையில் அச்சிடப்பெற்ற சித்தார்த்திவருட வாக்கிய பஞ்சாங்கம் வெளிவந்திருக்கின்றது. இது வழக்கம்போல நன்கு கணித்து அழகுற அச்சிடப்பெற்றிருக்கின்றது விலை சதம் 25 எமக்கனுப்பியபிதிப்பை நன்றியறிதலுடனேற்றோம்.

நாயன்மார்கட்டு வைத்தியசாலை:—தேசாதிபதியவர்கள் சென்ற சனிக்கிழமை காலை நாயன்மார்கட்டு வைத்தியசாலையைத் தரிசித்தனர். இவரது வரவை நோக்கி மேற்படி வைத்தியசாலை வாயிலில் ஓரலங்காரப்பந்த ரிடப்பட்டிருந்தது. தேசாதிபதியவர்கள் இவ்வைத்தியசாலையில் வைத்தியசகாயம் பெற்றுக்கொண்டிருந்த நோயாளரையும், மருந்துச்சாலை முதலியனவற்றையும் பார்வையிட்டு அதிக சந்தோஷமடைந்து சென்றனர்.

சட்டநிரூபண சபை:—இலங்கைச் சட்டநிரூபணசபை கூட்டமொன்று வருகிற பெப்ருவரி௴ 12௳ நடைபெறும்.

சீயம் தேச இளவரசர்கள்:—சீயம்தேச இளவரசர்கள் சிலர் இங்கிலாந்துக்குச் செல்லும்வழியில கொழும்பிலிறங்கினர்.

நவீன சுரம்:—"இன்புளூவன்சா" என்னும் நவீனசுரம் மூன்றும் முறையாகக் கொழும்பிற் பரவத்தொடங்கியிருக்கின்றதென ஓர் கொழும்புப்பத்திரிகை கூறுகின்றது.

உபசரணைக் கூட்டம்:—மாத்தளை விவேகானந்த சபைப் பிரசாரகரும், இந்து பாடசாலை ஆசிரியருமாகிய யாழ்ப்பாணத்துடுவில், தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் வ. மு. இரத்தினேசுவரையரவர்கள், இராமநாதன் காலீஜில் ஒரு உபாத்தியாயராக நியமனம் பெற்றுச் செல்லுதலால், அவரை உபசரித்துப் பிரியாவிடைகூறி அனுப்புவதற்காகச் சென்ற (7-1-19)-ல் ஒரு விசேஷ சபை கூடியது. அப்போது ஸ்ரீமாந். கா. மயில்வாகனம்பிள்ளையவர்கள் அக்கிராசனம் வகித்திருந்தார்கள். தமிழ்வேத மோதியபின் ஐயரவர்களால் 'மனித மாண்பு"என்னும்விஷயம் சுருக்கி விளக்கிப் பேசப்பட்டது. பின்பு, கலாசாலையின் உதவி உபாத்தியாயரவர்கள் ஐயரவர்கள் செய்த விசேஷ நன்மைகளைக் காட்டிப்பேசிப் பிரியாவிடை கூறினார்கள். சபையின் அபிமானிகளால் ஒரு தொகைப் பணம் முன்னே ஐயரவர்களுக்கு உபகரிக்கப்பட்டது. ஐயரவர்கள் தன்னைக் கௌரவப்படுத்தியது திருவருள்என்றும், தான் ஏதுங் குறை செய்திருந்தால் மன்னிக்க, என்றும் அன்பர்களாக யாவருமிருக்கவேண்டு மென்றுங் கூறி யாவருக்கும் ஆசீர்வாதஞ் சொல்லவே தேவாரமோதிச் சபை நிறைவேற்றப்பட்டது. யாவருஞ் சிற்றுண்டி முதலியனவற்றால் உபசரிக்கப்பட்டனர். அடுத்தநாள் ஐயரவர்கள் யாழ்ப்பாணஞ் சென்றனர். ஐயரவர்கள் தமதுமுயற்சியில் மேன்மையடையச் சிவபிரான் கருணைபாலிப்பாராக.

கடிதம்.

ஓர் உபந்நியாசம்:—தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தில் (3-1-19) வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்குமேல் வித்துவான் ஸ்ரீமத். சி. தாமோதரம்பிள்ளையவர்கள் மானுடப் பிறவியின் பயனைப்பற்றி ஒரு சிறந்த உபந்நியாசஞ் செய்தனர். கடிதம்.

தேகவியோகம்:—சிதம்பரம் ஸ்ரீமந் நடராஜமூர்த்திகோயில் தர்மகர்த்தர்களுள்ளும் அர்ச்சகர்களுள்ளும் ஒருவராயிருந்த பிரமஸ்ரீ அ. சிற்சபேச தீக்ஷிதரவர்கள் சென்ற மாசம் 24௳ புதவாரத்தன்று தேகவியோகமாயினர். தீக்ஷிதரவர்களை இழந்து துன்புறும் இவரது புத்திரர் பிரமஸ்ரீ. வேங்கடசுப்பிரமணிய தீக்ஷிதரவர்களுடனும் ஏனைய சுற்றமித்திரர்களுடனும் எமதனுதாபமுமிருக்கின்றது.

பம்பாயிலே வேலைக்காரர் கலகம்:—பம்பாயிலே யந்திரசாலைகளில் வேலைசெய்வோருள் 75000 பேர் வரையில் வேலைசெய்யப் போகாது கலகம் விளைத்துநின்றார்கள். அங்குள்ள 88 யந்திரசாலைகளுள் 75 யந்திரசாலைகளில் வேலை நிறுத்தப்பட்டதாம். யந்திரசாலை அதிகாரிகள் கலகக்காரரின் நோக்கமின்னதென்று தமக்குத் தெரியவில்லையென்றும் அவர்கள் தங்கள் குறைகளைத் தெரிவித்தால் அக்குறைகளைத் தாடி

கிவர்த்திசெய்வார்களென்றும் அறிவித்திருக்கின்றனர்.

ஓர் பெண் ஆகாயகமனி:—ரூத்லோ என்னுமோர் அமெரிக்கபெண் ஆகாயக்கப்பல் மூலமாக கீழைத்தேசங்களுக்குச் செல்லப்புறப்பட்டு சான் பிரான்சிஸ்கோ என்னுமிடத்திலிறங்கியிருக்கின்றனர். இவர் ஜப்பானிய, சீன, இந்திய பெண்களுக்கு, பெண்களும் ஆகாயரதங்களை இயக்கவல்லமனக் காட்டப்போகின்றனராம். இப்பெண் சிக்காக்கோவிலிருந்து நியுயோர்க் பட்டினத்திற்கு ஒன்பது மணித்தியாலத்தில் பறந்திருக்கின்றனராம். இவ்விரு இடங்களுக்கு மிடையிலுள்ள தூரம் 950 மைல்.

ஜோன் இளவரசரின் மரணம்:—மகத்துவந்தங்கிய நமது அரசரவர்களின் கனிஷ்டபுத்திரன் ஜோன் இளவரசரவர்கள் இறந்துவிட்டனர். யுத்தம் முடிவாகிச் சந்தோஷமுண்டாயிருக்குங்காலத்திலே நமதரசரும் அவரது பாரியாரும் தங்கள் காதன்மகனை யிழந்தது பிறிட்டிஷ் இராச்சிய முழுவதிலும் பெருந் துக்கத்தைப் புண்டாக்கியிருக்கின்றது. ஜோன் இளவரசர் 1905-ம் ஆண்டு பிறந்தவர். இவரைச் சிறுவயது தொடக்கம் இடைக்கிடை பீடித்து வருத்திய வலி நோயே இவரது மரணத்துக்குக் காரணம்.

சேர் சத்தியேந்திர பிரசன்ன சின்ஹா:—இந்திய சனத்தலைவர்களுளொருவரும், இந்திய பிரதிநிதிகளின் சட்டநிரூபகசபையில் ஓர் அங்கத்தவராயிருந்தவரும், இந்தியாவுக்குச் சுயவரசுச் சலாக்கியம் கொடுக்கப்படவேண்டு மென்னுங் கொள்கையை யுடையவரும், யுத்த ஆலோசனைச்சபை இருமுறை லண்டனிற் கூடியபோது அதில இந்திய பிரதிநிதியா யிருந்தவருமாகிய சேர் சத்தியேந்திர பிரசன்ன சின்ஹா அவர்கள் இந்திய உப மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தியஉபமந்திரியாயிருப்பவருக்கு பாளிமேந்துப் பிரபுக்கள் சபை யங்கத்தவராயிருக்குஞ் சலாக்கியமுமுண்டு. ஆகவே இவர் இப்போது பிரிட்டிஷ் பட்டந்தரர்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கின்றனர். இந்தியர்களுள் சேர் சின்ஹா அவர்களே முதன் முதல் பிரிட்டிஷ் மந்திராலோசனை சபையில் ஓர் அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர். இது இந்தியர்களுக்கு உயர்ந்த அரசரிமைச சலாக்கியங்களளிக்கப்படுமென்பதற்கு ஓரறிகுறியா யிருக்கின்றது.

## யாழ்ப்பாணம்
## அரசாட்சிக் கைத்தொழில் வித்தியாசாலை.

இம்முட நாமத்துடன் இலங்கை வித்தியாதிகாரி மெஸ் ஈ. பீ. டென்ஹாம் அவர்களால் எழுதப்பெற்றவிஷயம் இப்பத்திரிகையின் நான்காம் பக்கத்திற் பிரசுரிக்கப்பெற்றிருக்கின்றது. நமது சாதியத்தார் நன்னிலையெய்தவேண்டு மென்னும் நோக்கங்கொண்ட யாழ்ப்பாண வாசிகள் ஒவ்வொருவரும் இவ்விஷயத்தை நன்கு சிந்தித்து மேற்படி வித்தியாசாலையின் அபிவிருத்திக்காய வழிகளைவகளோ அவைகளை யனுசரித்தல் ஆவசியகமாகும். "தாய்ப் பாஷையைக் கவனியாது அநேகர் இங்கிலிஷ்பாஷை படிப்பதையே விரும்புகின்றனர். ஆதலால் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் நிறைந்திருந்து, அவர்களிற் பெரும்பாலார் தேவையான சோதனைகளிற் சித்தியடையமாட்டாதவர்களாய், ஏதோ இங்கிலிஷ் படித்துவிட்டோமென்ற படிப்பையும் நிறுத்திக்கொள்ளுகின்றனர். அவ்விதமான படிப்புக்கு மதிப்பேயில்லை. அது அவர்களை எழுத்துவேலைக்கன்றி வேறு தொழில்களுக்கு உதவாதவர்களாக்குகின்றது. இதனால் வருங்கேடு சிறிதுகாலத்திற் புலப்படவரும்" என நமது வித்தியாதிகாரி யவர்கள் குறித்த விஷயத்திற் கூறியமை யதார்த்தமாகும்.

இற்றைக்கு ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன் ஆங்கிலங் கற்றோர் பலர் கண்டிப்பகுதயில் நடைபெற்ற காப்பித் தோட்டங்களில் வேலை கொள்ளப்பட்டார்கள். பிற்றைக் காலத்தில் தொலோய் இராச்சியப்பகுதியே நம்மூர் வாலிபர்கட்குப் பெரும்பான்மையும் இடங்கொடுத்து வந்தது. ஆனாலிப்போது தொலோய் இராச்சியப்பகுதியில் அத்தேசத்திற் பிறந்தவர்களுக்கே பெரும்பாலும் உத்தியோகங்கள் கொடுக்கப்படுகின்றன. இனிமேல் நம்மூர் வாலிபர் பிழைப்பதற்குப் புதியவழி திறக்கப்படவேண்டும். நமது வித்தியாகர்த்தரவர்களின் விருப்பப்படி ஓர் கைத்தொழிற் பாடசாலை திறக்கப்படின் நமது தேசத்தில் ஆங்கிலங் கற்ற வாலிபர் "அடகெடுவாய் பல தொழிலுமிருக்கக் கல்வியதிகமென்றே கற்றுவிட்டோமே" எனச் சொல்லி அந்தரித்துத் திரியவேண்டிவரா நமது பிள்ளைகள் சிறுவயசிலேயே கைத்தொழிற் கல்விபுகட்டப்படுவரேல் அவர்கள் தமக்கு உத்தியோகங் கிடைக்காதவழி, தமக்கேற்ற ஓர் தொழிலையேனும் நடத்தித் தமது சீவனத்தை இனிது பெறக்கூடியவர்களா யிருப்பார்கள்.

## நகத்தின் விஷத் தன்மை.

கொசுகு, பூனை முதலிய செந்துக்கள் வியாதிகளைப் பரவச்செய்கின்றன. அவைகள் விஷயத்திற் சாக்கிரதையாயிருங்கள் என்று சில டாக்தர்கள் எச்சரிக்கிறார்களே யொழிய, வியாதிகளைப் பரவச்செய்வதில் மனிதன் மிகவும் சாமர்த்தியசாலி; அவன் விஷயத்திற் சாக்கிரதையாயிருங்கள் என்று சொல்லவேண்டியது ஆவசியகம். ஏனெனில் அநேகம் வியாதிகள் பரவுவதற்கு மனிதனே முக்கிய காரணமாயிருக்கிறான்.

மேல்நாட்டு நாகரிகத்தின் பலன்ஒன்றை நமது சிறுவரிடத்திற் காணலாம். நகத்தை எப்போதும் வாயில் வைத்துக் கடித்துக்கொண்டிருப்பதும், புத்தகங்களின் ஒற்றைகளைப் புரட்ட நாத்திரகார வாயின் எச்சிலைத் தொட்டுக்கொள்வதும், முந்திரையை ஒட்ட எச்சிலைத் தொட்டுக்கொள்வதும் சிலரின் வழக்கமாயிருக்கிறது. மூக்கு காது முதலியவைகளிலிருந்து வரும் அழுக்கு முதலியவைகள் பையன்களின் விரல்களில்தான் ஏறுகின்றன. எச்சில் அழுக்கு முதலியவைகளில இருக்கும் கிருமிகள் நமக்கு மிகவும் கெடுதிவிளைக்கக்கூடியன என்பதைத் தெரிந்துகொண்டால் அவர்கள் அப்படியெல்லாஞ் செய்யமாட்டார்கள். "வாய், மூக்கு, காது, கண் முதலியவைகளிலிருந்து வெளிவரும் மலாதிகள் ஆழ்ந்த பச்சை வர்ணம் பொருந்தியவைகளாக இருந்தால், அப்பொழுது நமது துர்ப்பழக்க வழக்கங்களால் நமது விரல்களில் அவைகள் ஒட்டிக்கொண்டிருப்பது நமக்கு நன்றாய்த் தெரியும்; நாமும் ஆச்சரியப்பட்டுத் திகைக்கிடுவோம்" என்று ஒரு நிபுணர் எழுதியிருக்கிறார். எச்சில் முதலியன நமது விரல்களிற் சேர்ந்து, அவைகளிலிருந்து நாம் தொடும் பல பொருட்களிலும் பரவுகின்றன. ஆகவே கிருமிகளும் பரவுகின்றன. பதார்த்தங்களைப் பலரும்உபயோகிக்க வேண்டியிருப்பதால் அழுக்குப் பொருந்திய கைகளாலவற்றைத் தொடுகிற வழக்கத்தைச் சுத்தமாக விட்டுவிடவேண்டும்.

சிலர், தற்காலநாகரிகத்திற்கு அனுசரணையாக பிறஷ் போட்டுப் பல் தேய்க்கின்றார்கள். அவர்கள் கடைகளுக்குப் போய்ப் பிறஷ் நன்றாயிருக்கிறதாவென்று பார்க்குபொருட்டு ஒருதரம் பல்லில்வைத்துப் பார்ப்பதுண்டு. இது சீமையில் மிகவும் அதிகமென்று தெரிகிறது பின் அது பிடிக்காவிட்டால் கடையிலேயே விட்டுப் போவதுண்டு. பின்பு வேறொருவர் அந்தப் பிறஷை வாங்கி உபயோகிப்பதால் கிருமிகள் வாயிற் சேரும். இப்படியே இன்னும் அநேக விதங்களில் மனிதன் கிருமிகளை ஒருஇடத்திலிருந்து மற்றொரு விடத்திற்குப் பரவச்செய்கிறான்.

டெலிபோனில் பேசும்பொழுது இருமல் வியாதியுள்ளவர்கள் இருமுவதால், வியாதி அந்த டெலிபோனில் பேசுகிற மற்றவர்களுக்கும் பரவும் இருமுவதால் சுரம், தொண்டைகட்டு, அம்மை, முதலிய அநேக வியாதிகள் பரவுகின்றன. நாலு பேருடன் பேசும்பொழுதாவது, அல்லது ஒருசேர இருக்கும்பொழுதாவது இருமல் வந்தால் அடக்கிக்கொண்டு வெளியிற்போய் இருமிவிட்டு வருவது உத்தமகுணத்தைக் காட்டுகின்றது. இன்னும் கிராமங்களில் ஸ்நானஞ் செய்ய ஒரு குளமும் குடி நீலம் எடுக்க ஒருகுளமும் இருக்க வேண்டும். குளிக்கும் குளத்தில் குடிக்க நீர் எடுக்கக்கூடாது. குடிக்க நீர் எடுக்குங் குளத்தில் ஒருவரும் குளிக்கக்கூடாது. ஜனுபிமானி.

## ௩௩-வது
## இந்தியன் நாஷனல் காங்கிரஸ்.

(அக்கிராசனாதிபதியாகிய கௌரவ ஸ்ரீமாந் பண்டித மதன்மோகன் மாளவியா அவர்களின் உபந்நியாசம்)

"சகோதரப் பிரதிநிதிகளே! கனவான்களே! சீமாட்டிகளே! இந்தியரால் காங்கிரஸ் அக்கிராசனப் பதவி கொடுக்கப்படுவதுதான் ஒருவன் அடையும் பெரிய பதவி என்று சொல்லப்படுகின்றது. அப்படியிருக்க எனக்கு இப்பொழுது இரண்டாவது முறையாக இப்பதவி கொடுக்கப்பட்டிருக்கின்றது.

உலகத்தில் மாறுதல்கள் ஏற்படும் இச்சமயத்தில் இத்தேசியக் கூட்டத்தின் தலைவனாகவிருந்து இக்கூட்டத்தை நடத்த என்னை நியமித்திருக்கின்றீர்கள். இந்தக் கௌரவத்தை என்மேலுள்ள விசுவாசத்தினால் அளித்த உங்களுக்கு என் வந்தனத்தைச் செலுத்துகின்றேன். இராஜப்பிரதிநிதி சட்டசபையில் என்னோடும் மற்றவர்களோடும் ஜனங்களின் நன்மைக்காக உழைத்தவரும், நமது ஒற்றுமையின் நிமித்தம், அக்கிராசனப்பதவி வேண்டாமென்று விலகிக்கொண்ட சேலம் ஸ்ரீமாந் விஜயராகவாசாரியார் அவர்களுக்கும் எனது வந்தனத்தைச் செலுத்துகின்றேன். என்மேலுள்ள நம்பிக்கையின்பேரில் எனக்கு இப்பதவியைக் கொடுத்தீர்கள்.

உங்களுடைய உதவியின்பேரில் நான் என் கடமையைச் சரிவரச் செய்துமுடிப்பேன் என்று நினைக்கின்றேன். நாம் இன்று சரித்திர சம்பந்தமுள்ள இந்தியாவின் தலைநகராகிய டெல்ஹியிற் கூடுகின்றோம்.

நம்முடைய புராதன செல்வாக்குகளும் பெருமைகளும், அனுபவித்த கஷ்டங்களும் துக்கங்களும் ஞாபகத்திற்கு வருகின்றன. அவ்விஷயங்களையெல்லாஞ் சொல்லவேண்டுமென்று ஆவலாயிருக்கின்றது. ஆனால் இச்சமயஞ் சொல்லமாட்டேன். தற்காலநிலைமையைக் குறித்துச் சொல்லுகின்றேன். உலகத்தில் இதுவரை ஏற்படாத சண்டையின் முடிவு சந்தோஷமாகவுங் களிப்பாகவுங் கொண்டாடப்பட்டுவருகின்றது இங்கிலாந்தின் பிரதான மந்திரியார் பேசும்போது "பிரிட்டனின் குடிகளே" பிரிட்டனின் குடிகளும் நேசக்கட்சியாரின் குடிகளும் இந்தியாவின மக்களுஞ் சேர்ந்து சண்டையில் வெற்றியடைந்திருக்கிறீர்கள். உலகத்திற சுதந்தரம் பெறுவதற்கு இந்த பெருத்த வெற்றியாகும்.

இந்த யுத்தத்தில் நம்முடைய தேசமும் ஏராளமான உதவி செய்துள்ளதென்பதை நீங்கள் அறியவேண்டும். யுத்த ஆரம்ப முதற்கொண்டு கடைசிவரைக்கும் நமது இந்திய துருப்புகள் யுத்தகளத்திற்குச் சென்று சண்டை செய்துள்ளமைப்புகழ்ந்து "வைசராய்" அவர்கள் பேசினார்கள். யுத்தம் ஆரம்பமானபோது இந்தியர்களுக்கு இங்கிலாந்தின் மீது இருந்த குறைகள் ஏராளம். ஆனால் பிரிட்டிஷாருடைய நீதியையுஞ் சுதந்தரத்தையுங் கருதியே யுத்தகளத்திற்குச் செல்ல இந்தியர்கள் முற்பட்டார்கள். தங்களுக்குள்ள குறைகளை அச்சமயத்திற் சிறிதும் பாராட்டவில்லை. யுத்தத்திற் றலையிட நேர்ந்துவிட்டதென்று இந்தியசக்கரவர்த்தியவர்களிடமிருந்து தந்தி வந்தவுடன் இந்தியாவின் அரசர்களும் குடிகளும் தங்கள் குறைகளையெல்லாம் ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு யுத்தகளத்திற்குச் செல்லத் தயாரானார்கள்.

சத்தியத்தை நிறைவேற்றப் பல காலத்திற்கு முன் மகாபாரதயுத்தம் நடந்தமை யாவருடைய உள்ளத்திலும் நன்றாகப் பதிந்துகிடக்கின்றது. சென்ற முப்பதுவருடகாலமாக நம்முடையகாரியங்களை நாமே பார்த்துக்கொள்ளவேண்டிய சீர்திருத்தங்களைக் கேட்டுக்கொண்டு வருகிறோம். இந்தியா யுத்தத்தில் பிரிட்டிஷார் வெற்றிபெறவேண்டுமென்று நாம் ஒற்றுமையுடனிருந்து சக்கரவர்த்திக்கு நம் இராசவிசுவாசத்தைக் காட்டினோம். 14-9-14-ல் சக்கரவர்த்தியார் விடுத்த கடிதத்தில் இந்திய சிற்றரசர்கள் தங்கள் பணத்தையும் இரத்தத்தையுஞ் சொரியச் சித்தமாயிருப்பதாகத் தெரிவித்தார். நம்முடைய செயல்கள் வெற்றி பெற்றதற்கு நாம் கடவுளுக்கு வந்தனஞ் செய்வோம். நாம் வேண்டியளவு பணத்தையும் மனிதரையும் உதவினோம். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சிற்றரசரும் ஒவ்வொரு குடியானவனும் தங்களாலான உதவியைச் செய்திருக்கின்றார்கள்.

அரசர்பெருமானின் செய்தி இந்தியாவுக்கு வந்தநாண்முதல் இந்தியர்கள் தங்கள் பராக்கிரமமுள்ள போர்வீரர்கள் பிரான்சிலுள்ள யுத்தரங்கத்திற்கு அழைத்துக்கொள்ளப்படவேண்டுமென்று வேண்டினார்கள். முன்னிருந்த இராசப்பிரதிநிதியார் நம்மை நம்பியிருந்தார்; நாமும் அவரை நம்பியிருந்தோம். அவர் நம்முடைய வேண்டுகோளுக்கிணங்கி இந்திய துருப்புகளைப் பிரான்சுக்கு அனுப்பினார். அவர் இங்ஙனம் தம்முடைய அரசதந்திரத்தைக் காட்டியதற்காக இந்தியரும் நேசக்கட்சியாரும் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். நம்முடைய துருப்புகள் 1914-ம் வருஷத்தில் பிரான்சில் வெற்றியடைந்தன.

இந்திய பொதுஜனங்களும் சுயதேச மன்னர்களும் பணத்தாலும் ஆட்பலத்தாலும் உதவியிருப்பதைக் கணக்கிடுதல் கூடாதகாரியமாகும். இந்தியர் 300 கோடி ரூபாவரையில் உதவியிருக்கின்றனர். இந்தியமந்திரியார் சிலநாள்களுக்கு முன் பார்லிமெண்டில் யுத்தம் ஆரம்பித்தது முதல் 11,61,789 இந்தியர் சேனையிற சேர்க்கப்பட்டனரென்றும், 12,15,338 பேர் மேற்ரங்கத்திற்கு அனுப்பப்பட்டனரென்றும், அவர்களுள் 1,01,439 பேர் இறந்தும், காயமுற்றும்போயினரென்றும், பேசியிருக்கின்றனர். இவைகளை நினைக்கும்போது நாம்பெருமைபாராட்டிக்கொள்ளாமலிருக்கமுடியாது.

சென்ற நான்குவருடங்களாக நடந்த கொடுஞ் சண்டையின் பயனாக நமது ஜனங்கள் பலவித கஷ்டங்களையும் அனுபவித்துவந்ததுமன்றிப் பலர் உயிர்துறந்ததினால் இந்தியர் எண்ணிறந்த துன்பங்களாலவருந்திவந்திருக்கையிலுங்கூட நம் தேசமானது நமது மன்னர்பிரானிடம் வைத்துள்ள உள்ளன்பினாலும் விசுவாசத்தினாலும் தீரமாக ஆயுதந் தாங்கி, முடிவுவரையிற் சோர்வின்றிச் சண்டையை நடத்திவந்திருக்கின்றது. நம்மில் முஸ்லிம சகோதரர்களும் தீரமாகநின்று உழைத்தது மிகவும்பாராட்டத்தக்கதாகும் அவர்களுக்கும் துருக்கிக்கும் ஏற்பட்டுள்ள மதசம்பந்தமான பற்றும், துருக்கி பாதகமான காரியங்களில் அவர்களுக்குண்டாகக்கூடிய மனோபாவங்களையும் அனைவரும நன்றாயறிவீர்கள். துருக்கியானது நமது மன்னர்பிரானின் நேசக்கட்சியாருக்கு விரோதமாக இச்சண்டையிற் றலையிட்ட காலத்தில் நமது முஸ்லிம் சகோதரர்களின் மனது மிக்க வருந்தியது. துருக்கிக்கு நிகழ்ந்த சம்பவங்களைக் குறித்து நமது மகமதிய சகோதரர்கள் பாராட்டாமலிருக்க முடியாது. இவ்வாறிருக்க, நமது இந்திய முஸ்லிம சகோதரர்கள் நந்தேசத்தின்மீது மிக்க அன்புடையவர்களாய்த் தேசகாரியத்தை மத விஷயத்திற் கருதாமற் கடமையைப் பிரதானமாகக்கொண்டு இராசவிசுவாசத்தையும், தேசவிசுவாசத்தையுங்காட்டியது மிக்க பெருந்தன்மையாகும். இது நமது தேச சரித்திரத்திற் சாஸ்வதமாகக் கொண்டாடக்கூடிய வைபவமாகும். இதற்காக நாம் அவர்களுக்கு வந்தனமளிக்கக்கூடியதன்றி இந்த அரசாங்கத்தின் குடிகளாகிய நாம் இதற்காகப் பெருமை பாராட்டவேண்டியவர்களாகவு மிருக்கின்றோம்.

நாம் மேலேபோவதற்குமுன் நாமெல்லோரும் யுத்தம் வெற்றியுடன் முடிந்ததற்காகவும் உலக முழுமையும் சமாதானம் ஏற்படவேண்டியதாகவும் நமது கடவுளை வேண்டுவோம். நமது அரச சக்கரவர்த்திக்கும் இந்தியருக்கும் யுத்தமுடிவு சந்தோஷத்தைத் தருகின்றது என்று தெரிவிக்கின்றேன். கொடுங்கோல்கள் சாய்ந்துவிட்டன. நமது செங்கோன்மன்னர் இன்னும ஜனவிருப்பப்படி அரசு செலுத்துகின்றார். இது இந்தியருக்கு அதிக மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த யுத்தத்தில் உயிரை வெறுத்துப் போர்செய்த பிரிட்டிஷ் பிரஜைகளுக்கும் குடியேற்ற நாட்டாருக்கும் சந்தோஷத்தைத் தெரிவிப்போம்.

இந்த யுத்தத்திற் பெல்ஜியம், பிரான்ஸ் முதலியவைகளைப்போல, இங்கிலாந்து தனது ஆவியையும் பொருளையுஞ் செலவழிக்காமற்போனால் யுத்தத்தில் வெற்றியை விட்டுவிடவேண்டியிருந்திருக்கும். ஜர்மனியின் விருப்பம் நிறைவேறியிருக்குமென்பது நிச்சயம். இந்த யுத்தத்தில் இங்கிலாந்து அதிகமாகத் தியாகஞ் செய்தது. அதனாற்றான் இங்கிலாந்து அதிக பெருமையை இப்போது பெற்றிருக்கின்றது. தங்கள் தாய்நாட்டின் சுதந்தரத்திற்கும் சமத்துவத்துக்கும் சகோதரத்துவத்துக்கும் பிரான்சுக்காரர்கள் தற்காப்பிலிருந்துகொண்டு இந்த யுத்தத்தில் அதிக தியாகஞ்செய்து வெற்றிபெற்றதற்கு நீங்களெல்லோரும அவர்களுக்கு உங்களுடையசந்தோஷத்தைக் தெரிவிப்பீர்களென்று நம்புகின்றேன். பிரான்சுக்காரர்களுடைய கஷ்டங்களை நாம் கவனித்தோம். 1914-ம் 15-ம் வருஷத்தில் ஜர்மனியர் கடும் வேகமாகப் பலத்த சைநியங்களுடனும் பிரான்ஸை நோக்கிப் படையெடுத்த காலத்தில் நமது இந்திய படைகள் ஜர்மனியரின் சைநியங்களை எதிர்த்து நின்று போராடி நேசக்கட்சியாரின் யுத்த கொள்கையையும் உலக நாகரிகத்தையுங் காப்பாற்றின இச்சம்பவம் எல்லோருக்கும் பெருமையுஞ் சந்தோஷமுமாகும். கடைசியாக நம்முடையவர்தனத்தையும் சந்தோஷத்தையும் அமரிக்காவுக்கு நாம் தெரிவிக்கவேண்டும். இந்த யுத்தத்தில் அமரிக்கர் ஆட்பலத்தாலும் பணஉதவியாலுஞ் செய்த பேருதவிகள் அநேகம். அமரிக்கா இந்த யுத்தம் தருமயுத்தமென்று கோஷித்தது. மானிடசமூகத்தார்கள் அமெரிக்காவுக்கும் அதன் பிரசிடெண்டுக்கும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள் யுத்தம் எப்படி முடியுமோ வென்று நேசக்கட்சியார் ஏங்கிநிற்குங் காலையில், அமரிக்கர் உதவிசெய்ய முன்வந்ததற்கு நாம் கடவுளைத் துதிக்கவேண்டும். நேசக்கட்சியாருக்கும் அமரிக்கருக்கும் நம்முடைய வந்தனத்தையும் சந்தோஷத்தையுஞ் செலுத்தவேண்டும்.

சகோதர சகோதரிகளே! இந்த யுத்தம் கடவுளால் ஏற்பட்டதாகும். அதன் முடிவும் கடவுளுடைய அனுக்கிரகமென்று நாம் கருதவேண்டும். ஐரோப்பிய நாட்டினர் உலோகாயுதக் கொள்கையில் மூழ்கியிருக்கிறார்கள். ஐரோப்பிய நாகரிகம் முதிர்ந்த நிலைமையில் இருக்கிறதாகக் கூறப்பட்டபோதிலும், ஐரோப்பாவிலுள்ள பல நாடுகள் பலவாறு கலகஞ் செய்துகொண்டிருக்கின்றன. தங்களுக்குள்ளேயே சண்டைபோட்டுக்கொள்வதுமன்றி வெளியுலகத்திலும் தங்கள் ஆதிக்கத்தைக் காட்ட ஐரோப்பியர் வந்துவிட்டனர். அவ்வைரோப்பியர், பணத்திற்கும் அதிகாரத்திற்கும் ஆசைப்பட்டு பலஹீனமான நாடுகளினுடையவும் பலஹீனமான ஜனங்களுடையவும் சுதந்தரத்தை அழித்துவிட்டனர். ஐரோப்பாவில் ஆதிக்கம்பெற முற்காலத்தில் ஸ்பெயின், ஆஸ்டிரியா, பிரான்சு முதலிய தேசங்கள் பிரயத்தனப்பட்டன. இப்பொழுது ஜர்மனி அங்ஙனமே முயற்சி செய்தது. பதினெட்டாம்நூற்றாண்டு தொடங்கி ஐரோப்பிய நாடுகளின் சுதந்தரத்தைப் பறிமுதல செய்ய இங்கிலாந்து முயலவில்லை. ஆனால் அந்த நாடுகள் பலமுள்ள அந்நியர்களால் தாக்கப்பட்டபோது அவைகளை இங்கிலாந்து கைவிட்டுவிட்டதுண்மை. ஆனால் அந்த இங்கிலாந்து ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் வேறு முறையையே அநுசரித்துவந்தது. சென்ற ஐம்பதுவருஷகாலமாக இங்கிலாந்து ஈஜிப்ட், சௌடான், தென்னாபிரிக்கா, பர்மா முதலிய சிறியநாடுகளைச் சேர்த்துக்கொள்ளச் சண்டை செய்தது. குடிபேற்றநாடுகளின் ஆதிக்கத்தைப்பற்றி ஐரோப்பிய ஜனங்கள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக்கொண்டிருந்தன. மொராக்கோ பிரதேசத்தைக் கைப்பற்றிக்கொள்வதற்குப் பிரான்சுக்கும் ஜர்மனிக்கும் சண்டை உண்டாயது. பால்கன்ஸ் நாட்டைக் கைப்பற்றிக்கொள்ள ருஷியாவுக்கும், ஆஸ்டிரியவுக்கும் சச்சரவு உண்டாயது. துருக்கியை ஆதிக்கஞ் செய்துகொள்ள ஜர்மனிக்கும் பிறநாடுகளுக்கும் சச்சரவு உண்டாயிற்று இந்த நாடுகள் யாவும் எப்பொழுதுஞ் சண்டை செய்துகொள்ளத் தயாராயிருக்கின்றன சேனைகளையும் ஆயுதசாமான்களையும் சில நாடுகள் அதிகமாக வைத்துக்கொண்டிருப்பதால் பூமிதேவியானவள் அலமருகின்றாள். உடன்படிக்கைகளும் ஒற்றுமை முறைகளும் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. ஆனால அவ்வநாடுகள் தத்தம் அதிகாரத்தைத் தங்களிடத்திலேயே நிறுத்திக்கொள்ளப் பார்த்தன. ஓர் இனம் மற்றோர் இனத்தை எதிர்க்க விரும்பினால எதிர்க்க விரும்பும் இனம், எதிரி இனத்தை மிருகபலத்திலமிஞ்சியதாக இருக்க வேண்டுமென்ற முறைமையே இப்பொழுது நிகழ்ந்து வருகின்றது. படிப்படியாக வந்து கடைசியில், இங்கிலாந்து, ஐரோப்பாவிலுள்ள இனங்களைவிடப் பலமுள்ள இனமாக முன்னின்றது. அவ்வுயர்தர ஆதிக்கத்தைத் தன்னிடத்தே வைத்துக்கொள்ள விரும்பியது. ஆனால் அதன் சகோதர தேசமாகிய ஜர்மனி, இங்கிலாந்தைப் பார்த்துப் பொறாமைகொண்டதுமன்றி, தான் அதைவிட முன்னேற்ற மடையவேண்டு மென்று விரும்பியது. பலவருடங்களாக ஜர்மனியானது கைத்தொழில், பொருளாதாரம், இராணுவம் முதலிய விஷயங்களில் இதர இனங்களோடு சிநேகபான்மையே பாராட்டிவந்தது. உலகத்தில் தான் ஆதிக்கம் பெறவேண்டுமென்பதே அதன் முக்கிய நோக்கம். ஜர்மனி தன் இனத்தைக் கைதேர்ந்த ஓர் இராணுவப்படையாகச் செய்துகொண்டது.

பலத்தையே உதவியாகக்கொண்டு வெற்றி பெறவேண்டுமாயின், எந்த நாடேனும் ஜர்மனி செய்ததை விட இன்னும் அதிகமாகச் செய்ய முடியுமாவென்று யோசித்துப்பாருங்கள். தனக்குச் சௌகரிய முண்டாகுமென்று கருதியபோது அது வேண்டுமென்றே உலக சமாதானத்தைக் குலைத்துவிட்டது. ஜர்மனியின் பலம் அதைச் சேர்ந்திருந்த நேசநாடுகளின் உதவியால் அதிகரிக்கலாயிற்று. இன்னொருபுறத்தில் இங்கிலிஷ்காரரும், பிரெஞ்சுக்காரரும், ருஷியரும், இற்றலியரும், குடியேற்றநாட்டினரும், இந்தியரும் நின்றிருந்தனர் இந்த யுத்தத்தில் நின்றிருந்த இருதரத்தாரைக் காட்டிலும் பலமுள்ள சத்துருக்கள் எந்த யுத்தத்திலும் சண்டையிட வந்திருக்கமாட்டார்கள். ருஷியா நிலைகுலையாமலிருந்திருப்பின் நேசகட்சியார் முன்னரே வெற்றி பெற்றிருப்பர். ஆனால் யுத்தத்தின் நோக்கம் நிறைவேறியிராது. ஆதலின் யுத்தம் வழக்கப்படியே பயங்கரமாக நடந்துகொண்டிருந்தது. யுத்தம் முடிவதற்குச் சிலமாதங்களின்முன் ஜர்மனியரே வெற்றி பெறுபவர்போலக் காணப்பட்டனர். தருமத்திற்கும் நியாயத்திற்கும் யுத்தஞ் செய்வதற்காகத் தங்கள் பொருளையும் மனிதரையும் இழந்து போர்புரிந்தும் கொடிய செய்கையையுடைய ஜர்மனியர் வெற்றிபெறுவரோ வென்று நேசக்கட்சியார் மனங் கலங்கினர். ஆயினும் அவர்கள் தருமத்திற்கு விரோதமாகச் சண்டை செய்தபடியால் அவர்களுக்கு வெற்றி யுண்டாகாதென்று எண்ணினர். நேசக்கட்சியார் தருமவழியில் நடந்தனராதலின் அவர்களே வெற்றி பெறவேண்டுமென்று கடவுள் விதித்திருந்தார். ஆயினும், தர்மத்திற்கேற்பவே பலன் கிடைக்கு மென்பதை அவர்கள் சிறிது காலத்தில் அறிந்துகொள்ள வேண்டியதாயிற்று.

நேசக்கட்சியாரிலும் பலர், முன்னர் பலமே தருமம் என்னும் கொள்கையை மனதிற் றாங்கி யுத்தஞ் செய்திருக்கின்றனர். யுத்தந் தொடங்கும்போதும் அவர்களுள் எல்லோரும் தருமமே பலம் என்பதைக் கடைப்பிடிக்க எண்ணவில்லை. யுத்தத்தின் மூன்றாவது ஆண்டில் கல்கத்தா பிஷப் தெய்வப்பிரார்த்தனை செய்தபொழுது, நேசக்கட்சியாரின் வெற்றி எதிர்பாராத சந்தர்ப்பங்களினால் தாமதித்திருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். (வரும்.) தே. ப.

## யாழ்ப்பாணம் அரசாட்சிக் கைத்தொழில் வித்தியாசாலை.

கல்வியின்பயனைப்பற்றி யாழ்ப்பாணத்தாருக்கு மற்றொருவர் எடுத்துக்கூறுதல் அநாவசியகமாம். தமக்கைபிள்ளைகள் இலங்கையில் மாத்திரமன்றிப் பிறதேசங்களிலும் ஏற்ற வருமானம் கிடைக்கக்கூடிய பிழைப்பைத் தேடிக்கொள்ளத் தக்கவர்களாகும்பொருட்டு அவர்களுக்கு நல்ல கல்வி பயிற்றுவித்தலின் பயனை அவர்கள் நன்கறிந்துள்ளார்கள்; ஆதலால், கல்வி பயிற்றுதலைப் பற்றி அவர்களைக் கட்டாயப்படுத்தும் ஆவசியகம் நேர்ந்ததில்லை. அன்றியும், யாழ்ப்பாணத்தாரின் விவேகஞ் சிறந்ததென்பது வெளிப்படையாயிருக்கின்றது. இங்கிலிஷ்க் கல்வியால் அடையலாகும் பொருட்செல்வப் பேற்றைப்பற்றி அவர்களுணர்ந்துள்ளாரென்பதற்கு இன்றும் கொழும்பிலிருந்தும் மலாய்நாடுகளிலிருந்தும் வந்துகொண்டிருக்கும் பெரும்பணமே போதிய சான்றாகும்.

ஆயினும், சற்றே நின்று ஆலோசனை செய்ய வேண்டிய காலம் அணுகிவிட்டது. தன்னிடமிருந்த முட்டைகளெல்லாவற்றையும் ஒரே கூடையிற் போட்டுவைத்த கட்டமைதலைப் போலத் தாமுஞ்செய்கின்றனரோ அல்லரோ என்பதையும், அவ்வாறு போட்டுவைக்க எடுத்துக்கொண்ட கூடைதான் மிகச் சிறியதே என்பதையும் யாழ்ப்பாணத்தார் உற்றுநோக்கியாலோசிக்க வேண்டியவராகின்றனர். தாய்ப்பாஷையைக் கவனியாது அநேகர் இங்கிலிஷ்ப் பாஷை படிப்பதையே விரும்புகின்றனர். ஆதலால் பள்ளிக்கூடங்களிற் பிள்ளைகள் நிறைந்திருந்து, அவர்களிற் பெரும்பாலார் தேவையான சோதனைகளிற் சித்தியடையமாட்டாதவர்களாய், ஏதோ இங்கிலிஷ் படித்துவிட்டோமென்று படிப்பையும் நிறுத்திக்கொள்ளுகின்றனர். அவ்விதமான படிப்புக்கு மதிப்பேயில்லை; அது அவர்களை எழுதுவேலைக்கன்றி வேறு தொழில்களுக்கு உதவாதவர்களாக்குகின்றது.

இதனால் வருங் கேடு சிறிதுகாலத்திற் புலப்படவரும். தென்னிந்தியாவில் இப்போது கல்விமுறையைப்பற்றியும் இளைஞர்களுக்கு என்னசெய்யலாமென்பதைப்பற்றியும் உண்டாயிருக்குங் கவலைக்குக் காரணராய்த் திரியும் பீ. ஏ. சோதனைக்குப்படித்தவர்கள் (அதிற் சித்தியடைந்தவர்களல்ல) என்றிருப்போரைப்போல இங்கேயும் பிழைப்பற்றவராய் அநேக வாலிபர் மற்றவர்களுக்குப் பாரமாய்த் திரியவேண்டியதாகும்.

தொலைநாடுகளிலும் மலாய் நாடுகளிலும் அநேகர் போயடைவதால் இவ்வித நிலையால் வருங்கேடு முற்றாய்ப் புலப்படாதிருக்கின்றது; அந்நாடுகள் எக்காலமும் யாழ்ப்பாணத்தாருக்கு வருமானங் கொடுத்துக்கொண்டிருப்பனவாமோ?

அங்கும் வேலை தேடுவோரின் தொகை கூடிக்கூடிவர, வேலைதேடுங்கஷ்டமோ நாளுக்குநாட் பெரிதாகிக்கொண்டேவருகின்றது; தங்களிலும் உயர்ந்த படிப்பினையுடையவர்களாகிய அந்நாட்டு வாசிகளும் சிலரும் வேலைதேடி முன்வர, யாழ்ப்பாணத்தார் பிழைப்புத் தேடிக்கொள்வது பெரும் பிரயாசமேயாம்.

இவர்களுக்கு அவ்விடங்களிலிருந்த மானங் குறையக் குறைய, யாழ்ப்பாணத்திலுங் கொழும்பிலும் பிழைப்புத் தேடும் வாலிபரின் தொகை கூடிக்கூடிவரும்.

ஆதலால், யாழ்ப்பாணத்தாரிற் பெற்றோராயுள்ளோர் தங்கள் பிள்ளைகளுக்கு வேறு தொழிற்றுறைகளைத் தேடுவது அத்தியாவசியகமாம்; இங்கிலிஷ் படிப்பதாலடையும் பொருட்செல்வப் பேற்றை யாழ்ப்பாணத்தாரும் முதன்முதல் அறிந்தவர்களாய்; அவர்களே கைத்தொழில் வித்தை நலத்தையும் நன்குணர்ந்து பாராட்டுவார்களென்பதற் கையமில்லை.

இக்காலத்தின் கோலங்களும் இவ்வித்தைகள் வரவர விசேஷமுற்றுவருவதைக் காட்டுகின்றன; இவ்வித்தைகளிற் பயின்றோர், விசேஷபயிற்சியுடையோரன்றி மற்றையோர்சேர்ந்துகொள்ளக்கூடாத கம்பெனிகளிலும், இஞ்சினீர்வேலை நடக்கும் எந்த இடங்களிலும் சேர்ந்து பிழைத்துக்கொள்ளத் தக்கவர்களாகின்றார்கள். அன்றியும், அவர்களது சாதாரணக் கல்வியறிவு வளரப்பெற்று, அவர்கள் எல்லாவிதமான தொழில்களிலும் அநுகூலமடையத்தேற்றவர்களுமாகின்றார்கள். கைத்தொழில் முறையிற் பயின்றவனொருவன், தன் ஆயுதங்களைப் பழுதுபார்த்துத் திருத்தவும், தன் வேலையிற் கண்ணுங்கையு மமர்ந்திருக்கப் பண்ணவும் பழகியிருப்பதனால், தமவேலையை அதி செப்பமாய்ச் செய்பவனாவன்.

மற்றைப் பகுதிகட்கு முன்னர் முதன்முதல் யாழ்ப்பாணத்தாருக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கும் பாடசாலை நடைபெறுவதற்கு, அவர்களுடைய முழு ஒத்தாசையும் வேண்டியதாயிருக்கின்றது; அவர்களுட் பெரியோராயுள்ளவர்களிற் பெரும்பாலாரின் அங்கீகாரமும் பேருதவியும் அதன்பொருட்டு ஏற்கனவே கிடைத்திருக்கின்றன.

அரசாட்சியார் அனுமதி செய்வாராயின், பின்வருவனவற்றைச் செய்தல் உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. அவையாவன.—

(1) டிஸ்திறிக்ற் பாடசாலைச் சங்கத்தாரின் செலவில், யாழ்ப்பாண நாட்டிலே அரசாட்சிக் கைத்தொழில் வித்தியாசாலையொன்றைக் கட்டுதல்.

(2) இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமுள்ள பெரிய பள்ளிக்கூடங்களுக் கேற்றவையென்று அங்கீகரிக்கப்பட்டவையும் இப்போது இந்தியாவிற் கைக்கொள்ளப்படுகின்றவையுமான தற்கால முறைகளுக் கேற்றவாறு, கைத்தொழில் பழகவுஞ் சில்லறைவேலைகள் செய்யவும் வேண்டிய உபகரணங்களைப் பள்ளிக்கூடத்திலமைத்தல். "லண்டன் சிற்றி அண்ட் கில்ட்ஸ் சோதனை"யிற் சித்தியடைந்த ஆசிரியரொருவரையும், கைத்தொழில் செய்யப் பழக்கும்பொருட்டுச் சமமானொருவரையும் நியமித்தல். (இதற்காய செலவு வித்தியாபகுதியாரால் பொறுக்கப்படும்.)

(3) பன்னிரண்டு வயதுக்குக் குறையாதும் பதினாறு வயதுக்கு மேற்படாதுமுள்ள பராயத்து ஆண்பிள்ளைகளுக்கு வித்தியாசாலைத்தோரால் நியமிக்கப்படும் தக்க ஆசிரியர்களைக்கொண்டு கல்வி கற்பித்தல். பன்னிரண்டுவயதுக்குட்பட்ட பையன்களைக் கைத்தொழிற் பாடசாலையிற் சேர்ப்பதில் உபயோகமில்லை. முதலாம் வருடத்தில் கல்வி கற்பிப்பது தமிழ்ப்பாஷையிலேயாம்; இங்கிலிஷ் கற்பிக்கப்படும். அப்படிச் செய்துவந்து பள்ளிக்கூடம் விடுமுன்பாகவே மாணவருக்கு இங்கிலிஷ் பாஷையிலேயே படிப்பெல்லாம் நடத்தப்படும். மற்றைய பாடங்கள்:- இலக்கணிதம், சாஸ்திரநூல், படமெழுதல் ஆகியவையாம். இவற்றோடு கைத்தொழிற் பயிற்சியும், பழுது பார்த்தல் முதலிய சில்லறை வேலையும் நடைபெறும். தேர்ந்த சமமானவொருவன் இவ்வேலைகளிற் பையன்களைப் பழக்கிவைப்பான்; தொடக்கத்தில் அவர்களுக்கு உபயோகமான பழக்கமாயிருக்குமாறு சில்லுகளையும் பொருத்துதல், நீண்ட வளையங்களைப் பழுதுபார்த்தல், தாழ்க்கால் பின்னுதல், கதவு முதலியவற்றின் பூட்டைப் பழுதுபார்த்தல், இரட்டைச்சில்லு வண்டி பழுபார்த்தல் முதலிய சில்லறை வேலைகள் காட்டிக் கொடுக்கப்படும்; தோட்ட வேலையும் பழக்கப்படும். பையன்களின் தேகபெலனைத் தளரவிடாது காப்பாற்றத் தேக அப்பியாசமுஞ் செய்விக்கப்படும்.

(4) இந்த வித்தியாசாலையிலிருந்து சிலரை ஒவ்வொருவருஷமுந் தெரிந்தெடுத்துக் கொழும்பிலுள்ள கைத்தொழில் வித்தியாசாலைக்கனுப்பிப் படிப்பிக்க ஏற்படுசெய்தலும், இந்த வித்தியாசாலையிற் கற்றுத் தேறியவர்களுக்கு வருஷம் வருஷமாய் இதற்கென இத்தனை உத்தியோகங்கள் கொடுக்கப்படுதல் வேண்டுமென்று இஞ்சினீர்க்கந்தோர், நீர்ப்பாய்ச்சற்கந்தோர், நில அளவைக்கந்தோர் முதலிய விசேஷ பயிற்சியுடையோரையே வேண்டியிருக்குங் கந்தோர்த்தலைவர்களிடம் ஒழுங்கு செய்தலும். இந்த வித்தியாசாலையிலிருந்து தக்க மாணவர் கிடைப்பார்களாயின், அரசாட்சியாரின் "வாக்டறி" (factory) என்னும் இஞ்சினீர் வேலை பழகுஞ் சாலையில் அவர்களை வைத்துப் பழக்கியெடுக்க ஒழுங்கு பண்ண இஞ்சினீர்க் கந்தோர்த் தலைவரவர்கள் தயாராயிருப்பார்கள்.

பின்வரும் இரண்டு காரியங்களுங் கைகூடுமாயின், மேலே பொழிப்பாய்க் காட்டியிருக்கும் ஏற்பாடுகளைப்பற்றி அரசாட்சியாருக் கறிவித்து, அவர்களனுமதியைக் கேட்க யான் உத்தேசித்திருக்கின்றேன்.

முதலாவது: பள்ளிக்கூடங்கட்ட நிலம் வேண்டியது; அதை வாங்குஞ்செலவு அரசாட்சியார் பொறுக்கப்படாது.

இரண்டாவது: இந்த வித்தியாசாலையிற் கற்கும் ஒவ்வொரு மாணவனும் தான் படிக்கவேண்டிய நாலுவருஷகாலத்துக்கும் அங்கேயே விடுதி விட்டிருந்து படிக்கத்தக்கதாய், இலங்கையிலேயும் மற்றிடங்களிலேயுமுள்ள யாழ்ப்பாணத்தார் வித்தியோபகார நிதி சேர்த்துக் கொடுத்தல் வேண்டும். இவற்றில் முதலாவதாய்ச் சொல்லியது கைகூடிவிட்டது அதனைப் பெருமகிழ்ச்சியடையலானேன். ஈகைவண்மையும் தேசாபிமானமும் பொருந்தியவரும், கே. சீ, சீ. எம் ஜீ. என்னும் பட்டங்கள் பெற்றிருப்பவருமாகிய கௌரவ ஸ்ரீமாந் பொ. இராமநாதனவர்கள் கோப்பாயிலே ஐந்து ஏக்கர் நிலம் உபகரித்திருக்கின்றனர்; அது வித்தியாசாலைக்கு மிகவுஞ் சிறந்த நிலமாகும்.

பின்வரும் நியாயங்களைக் கவனித்துப் பார்த்தால், வித்தியோபகாரநிதி ஆவசியகமேயென்பது புலப்படும்:-

(1) வித்தியாசாலை விடுதிப் பள்ளிக்கூடமாயிருத்தல்வேண்டும். வித்தியாசாலைக் கணித்தாய் மாணவர்களிருப்பார்களாயின், படிப்பு மிகவும் விசேஷமுடையதாய் நடத்தப்படலாகும்; மாணவர்களை ஒழுங்காய் வைப்பண்ணிக்கொள்ளலாம். கைத்தொழிற் பயிற்சிக்கேற்ற நேரம் உதயகாலமேயாம்.

(2) மாணவர்கள் நாலுவருஷமும் படிப்பார்களென்பதற்குப் பொறுப்புவேண்டும்; நாலுவருஷ முடிவிலே சோதனையிற் சித்தியடைந்தோருக்கே "செட்டிப்பிக்கேற்" நிதரிசனப் பத்திரம் அளிக்கப்படும்.

மாணவர்கள் இரண்டொருவருஷத்துக்கு மாத்திரஞ் சேர்ந்திருந்து இங்கிலிஷ் கொஞ்சம் படித்துக்கொண்டு இங்கிலிஷ் பெரிய பள்ளிக்கூடங்களிற் சேருவார்களாயின், அந்த இரண்டொரு வருஷத்திற் படிக்குங் கைத்தொழில் வித்தையால் உபயோகமேயில்லை யென்னலாம். மாணவனுக்கு நாலுவருஷமும் விடுதிச்செலவு கிடைக்குமாயின், பெற்றோர் அவனை வித்தியாசாலையிலேயே வைக்க விரும்புவர்; அன்றியும், படிக்குங்காலம் வரையும் மாணவரை யொழுங்காய் வைப்பண்ணுதற்குப் பொறுப்பாகப் பிணையு மெடுத்துக்கொள்ளலாம்.

(3) தக்க மாணவரையே சேர்ப்பது நலமது; அம்மாணவர்கள் சுதேசபாஷைப் பள்ளிக்கூடங்களிற் படித்தவர்களில் முதற்றரமானவர்களாயிருத்தல் வேண்டும். அவர்களிலனேகர் தங்கள் வீடுகளிலிருந்து தூரத்தேயுள்ள வித்தியாசாலைக்குப் போய்வரக்கூடியவர்களல்லர். ஒருமுறை ஒருவனுக்கு வித்தியாவிருத்தி வெகுமதி கிடைத்தால் அவன் மேலும் மேலும் படிப்பிற் கருத்துடையவனாகி ஒன்றின்பின் மற்றொன்றாக வெகுமதிகள்பெற உற்சாகங்கொள்ளுவான்.

(4) வித்தியாவிருத்தி வெகுமதிகள்கொடுத்தல் யாழ்ப்பாணத்திலுள்ள எல்லா மதத்தினர்களுக்கும் பிடிப்பாயிருக்கும்; தத்தம் தமிழ்ப்பள்ளிக்கூடங்களிற் படிப்பை அபிவிருத்திபண்ணுவிக்க அவர்களுக்குத் தூண்டுகோலாயிருக்கும்; அன்றியும், தத்தம் மதத்தைச் சார்ந்த மாணவர்கள் பிற்காலம் பிழைப்புத் தேடிக்கொள்ள வழிகாட்டிவிடுதலுமாகும். மாணவர்கள் தத்தம் மதத்தவர் ஏற்படுத்தும் விடுதிச்சாலைகளில் நாலுவருஷமும் இருந்துவரலாமே.

(5) யாழ்ப்பாணத்தில் இந்தக் கல்வியைத் திருத்தமுறச் செய்வது அத்தியாவசியமாயிருக்கின்றது. அரசாட்சிக் கைத்தொழில் வித்தியாசாலையில் பன்னிரண்டுவயதுள்ள மாணவர் போய்ப்படிக்க வித்தியாவிருத்தி வெகுமதிகள் கிடைக்குமென்னும் நோக்கத்தால், இப்பள்ளிக்கூடங்களிற் படிப்புத் திருத்தமடைவதுமன்றி, கெட்டிதனமுள்ள பிள்ளைகளும் தேடிப் படித்துவருவார்கள்.

வருஷம் நூறுரூபாவீதம் நாலு வருஷத்துக்கு வித்தியாவிருத்தி வெகுமதி யொவ்வொன்று கொடுக்கப்படுதல்வேண்டுமென்பது எனது கருத்தாம். இவ்வெகுமதிகள் சுதேசபாஷைப் பள்ளிக்கூடங்களிற் படிக்கும் பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்படாதவர்களும் பதின்மூன்று வயதுக்கு மேற்படாதவர்களுமாகிய ஆண்பிள்ளைகளே இவ்வெகுமதிகளைப் பெறுதற்குரியவராவர்; அவைகள் வித்தியாசாலைக் கணித்தாய் வைக்கப்படும் விடுதிச்சாலையிலிருந்து படிப்பதற்கு விடுதிச் செலவின்பொருட்டுக் கொடுக்கப்படுவனவாம்; பள்ளிக்கூடச் சம்பளமில்லாமல் அவர்கள் படிப்பிக்கப்படுவார்கள். உத்தேசித்திருக்கும் இவ்வொழுங்குகளைப்பற்றி யாழ்ப்பாண டிஸ்திறிக் பாடசாலைச்சங்கத்தார் ஆலோசனைசெய்து, அரசாட்சியுடன் அதிகாரியாகிய சபாநாயகரவர்களும் சங்கத்தின் அங்கத்தவர்கள் யாவரும் அவைகளை அங்கீகரித்துக்கொண்டனர். இந்நோக்கத்தின்பொருட்டு ஸ்ரீமாந். T. காராளபிள்ளையவர்கள் 1500 ரூபாவும், ஸ்ரீமாந். எஸ். வீரகத்திப்பிள்ளையவர்கள் 400 ரூபாவும் உபகரிக்க உடன்பட்டிருக்கின்றனர்; அன்றியும், டக்டர் ஏ. நெல் அவர்களும் வெகுமதியொன்று கொடுக்க வாக்களித்திருக்கின்றனர்.

குறைந்தபட்சம் நாற்பதுமாணவர்களைச் சேர்த்தாவது வித்தியாசாலையை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கின்றேன்; ஆதலால் யாழ்ப்பாணத்தின் நன்மையை விரும்புகிறவர்கள் யாவரையும் இவ்வொழுங்குகள் நடைபெறுவதற்கு வேண்டிய வெகுமதிகள் கொடுக்க உதவிபுரியுமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

எத்தனையோவிதமாய்ப்பொருளுபகரிக்கலாம்.

(1) வித்தியாவிருத்தி வெகுமதி நிதியின்பொருட்டு ஒரேதொகையாய் முதல்கட்டலாம்; அதிலிருந்து வரும் வட்டியைக்கொண்டு வருஷம் நூறுரூபாவீதம் வெகுமதியொன்றேனும்பலவேனும் வருஷம் வருஷமாய்க் கொடுக்கத்தக்கதாகும்; அவ்வெகுமதிகள் பொருளுபகரித்தவரின் பெயரிலேயே கொடுக்கப்படும்.

(2) வருஷமொன்றுக்கு நூறுரூபாவாக நாலு தடவையில் வெகுமதிப் பணத்தைக் கட்டலாம்; அப்படிச் செய்வதானால், உபகரிப்பவர் நாலுவருஷத்துக்கு அத்தொகையைக் கொடுத்துவருதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(3) பள்ளிக்கூடமானேஜரொருவர் தமது பள்ளிக்கூடமாணவருக் குரித்தாதல்வேண்டுமென்று வெகுமதி கொடுக்கலாம்; அப்படிச் செய்வது அந்தப் பள்ளிக்கூடத்தில நல்லபடிப்பு நடைபெறச் செய்வதற்குப் பெரியதோர் தூண்டுகோலாகும்; தக்க கெட்டிக்காரனொருவன் இருந்தாற்றான் அவ்வெகுமதியைப் பெறுதற்கு அங்கீகரிக்கப்படுவான் என்னுங் கட்டுப்பாட்டின் பேரிலேயே அவ்விதமான வெகுமதி யேற்றுக்கொள்ளப்படுவதாகும்.

(4) ஒரு மிஷன் சபையானது அதற்குரிய பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குமாத்திரம் உரியனவாகும் வெகுமதிகளைக் கொடுக்கலாம்; அப்படிச் செய்வது மேற்போந்த கட்டுப்பாட்டுக்கு அமைந்திருப்பதாகும்.

(5) ஒரு டிஸ்திறிக்ற் பிரிவில் அல்லது ஊரில் இருப்பவர்கள் ஒருங்குசேர்ந்து அந்தப்பிரிவில் அல்லது ஊரிலுள்ள பிள்ளைகளுக்குரியதாகும் வெகுமதியைக் கொடுக்கலாம்; எப்படியெனில் காரைதீவில் அல்லது வல்லுவெட்டித்துறையில் இருப்பவர்கள் இருபதுபேர் சேர்ந்து ஒவ்வொருவரும் வருஷம் வருஷம் ஐவைந்து ரூபாவாக நாலு வருஷத்துக்குக் கொடுத்துவர இசைந்துகொண்டால் அவர்கள் காரைதீவு அல்லது வல்லுவெட்டித்துறையிலுள்ள ஒருவனுக்குரியதாகும் வெகுமதி யொன்றைக் கொடுக்க ஒழுங்குபண்ணிக்கொள்ளலாம்; அப்படியான ஒழுங்குசெய்யுங்காலத்து, உபகரிக்க உடன்பட்டுக்கொண்ட பணத்தை வருஷம் வருஷம் அறவிட்டுச் சேர்த்துத்தர அவர்களி லொருவர் பொறுப்பாளியாயிருத்தல்வேண்டும்.

(6) காலஞ்சென்றுபோனவர்களாகிய பரோபகாரிகளின் அல்லது பெற்றோரின் அல்லது உறவினரின் ஞாபகசின்னமாக வெகுமதிகள் கொடுக்கப்படலாம்.

உபகரிக்கவேண்டிய பணத்தொகை இவ்வளவுதான் என்று வரையறுக்கப்படவில்லை. புறநானூற்றில் மாடலன் மதுரைக்குமரனார் பாடியிருப்பதுபோல்,

> இரப்பாது கொடுக்குஞ் செல்வமு மிலனே
> இல்லென மறுக்குஞ் சிறுமையு மிலனே

என்று யாழ்ப்பாணத்தா ரொவ்வொருவருங் கூறுவரென்றும், அந்நூலிலேயே

> இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
> அறவிலை வாணிகன் ஆஅய் அல்லன்;
> பிறருஞ் சான்றோர் சென்ற நெறியென
> ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே

என்று புகழ்ந்துபாடப்பட்ட வேள் ஆயைப்போல் யாழ்ப்பாணத்துச் செல்வருஞ் செய்வார்களென்றும் நம்பியிருக்கின்றேன்.

ஈ. பீ. டென்ஹம்,
வித்தியாதிகாரி.

1918-ம் வருஷம் மார்கழி(டிசெம்பர்) மீ 12உ.


## விளம்பரம்.

சகலவிதமான அச்சுவேலைகளும்
மிக அழகாகவும்
வெகு விரைவாகவும்
செய்துகொடுக்கப்படும்.

சைவப்பிரகாசயந்திரசாலை
"இந்துசாதன" ஆபீஸ்
வண்ணார்பண்ணை.

## இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

1. கேர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.
இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.
கக நாள் மருந்தின் கிரயம் ரூபா க.

2. காஙவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.
இத அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.
கக நாள் மருந்தின் கிரயம் ரூ உ, அணா அ,

3 பிரமேக வியாதிக்குச் சந்துச்சேந்நூரம்.
எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.
கக நாள் மருந்தின் கிரயம் ரூபா உ.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.
சரீரத்தின்எந்தஇடத்திலும் நடுக்குத்தும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகாண்டீபம். ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.
கசு மாத்திரை புட்டி ஒன்று ரூ க, அணா அ.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.
மேகநோ யுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். உஉ நாள் மருந்து ரூ உ.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.
அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔடதம்.
கக நாள் மருந்தின் கிரயம் ரூ க, அணா அ.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்
எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும்.
உஉ நாள் மருந்து ரூ உ.

8 மூலிகை ரத்தினத் தைலம்.
அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ 1.

9. பரிமள பற்பொடி.
பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப் போலிருந்து கறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.
டப்பி 1 க்கு ரூ 0-4-0 டஜன் 0 க்கு ரூ 2-12-0.

10. படர்மேக சங்காரி வெண்ணெய்.
மேகநோயால் தேகத்தில்விழும் எவ்வித பத்துப் படைகளையும் க வேளையிற் குணமாக்கும்.
டப்பி க-க்கு அணா ச. டஜன் க-க்கு ரூ உ, அ. அ.
எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறுதீர்கள்! இதுசமயம்!! தவறுதீர்கள்!!!
உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(க) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன வயதிற்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்ன விதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) க. ஆயுட்பாகம், உ. எந்தவிதத்தினுந் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ரு. அது முன்னா பின்னா, ௬. புத்திரனுண்டா, எ. தனம் வைத்துப் போவேனா, அ. மரணமாகுமிடம் சுயதேசமா, கூ. சொந்தவீடு நிலம் கிட்டுமா, க0. கடன் எப்போது நிவிர்த்தியாகும், கக. விவகாரம் ஜெயமாகுமா, கஉ. ஜீனத்தசாரிகம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ க.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்,
கஉ பாகம் சார்ஜ் ரூ ௬.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்டில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம் எழுதினால் ஜோதிஷ, வைத்திய "கேட்லாக்" இனாமாக அனுப்புவோம்.

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம்,வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி.
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the SaivaPrakasa Press, Jaffna.